# திருச்சபையை கட்டி எழுப்புவது எப்படி?



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# திருச்சபையை கட்டி எழுப்புவது எப்படி ?

ஆசிரியர்
திருமறை அறிஞர்
பாஸ்டர். **அ.கிறிஸ்டோபர்**

வெளியிடுவோர்
**விண்ணக அப்பம்**
நேரு வீதி, ஈரோடு – 9.
தொலைபேசி எண். : (0424) 2271323

| | | |
|---|---|---|
| RE-EDITION | - | January 2008 |
| TOTAL COPIES | - | 2000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 14 |

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98433 - 58824**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediff.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. யோபு ஞானப்பிரகாசம்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் – 12.

ஆவிக்குரிய புத்தகங்களினால் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதியதொரு அசைவை உண்டாக்கிய பாஸ்டர் அ.கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பல தரப்பட்ட ஆவிக்குரிய தேவையுள்ள மக்களின் உளவேட்கையைத் தணிக்கும் இவரது எழுத்துக்கள், இனிய தமிழில் எளிய நடையில் கொள்கைப் பிடிப்பில் உறுதியோடு அமைந்திருத்தல் பாராட்டுக்குரியது.

இவர் எங்கள் இ.பெ.அ. ஸ்தாபனத்தின் ஈரோடு மறை மண்டல கண்காணிப்பாளராகவும், ஈரோடு திருச்சபையின் ஸ்தலப் போதகராகவும் இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார். எங்கள் ஸ்தாபனத்தின் பத்திரிக்கையான "இந்தியா பெந்தெகொஸ்தே நற்செய்தி" யில் தொடர்ந்து குடும்பங்களுக்கான செய்திகளை எழுதி வருகிறார்.

இவரது முந்தின வெளியீடுகளாகிய வளமான பிரசங்கி, ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது, என் தாசனாகிய யோபு போன்ற புத்தகங்கள் பெரும் ஆசீர்வாதத்தை வாசகர்களுக்குக் கொண்டு வந்தது போல இவரின் புதிய படைப்புகள் பெரும் ஆசீர்வாதங்களை தேவ ஜனத்திற்குக் கொண்டு வர கர்த்தர் கிருபை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன், ஜெபிக்கிறேன்.

ஆமென்



## என்னுரை

கிறிஸ்துவுக்குள் இனிய வாசகர்களே! அன்பு வாழ்த்துக்கள். எனது 14வது படைப்பு உங்கள் கரங்களை அடைந்ததற்காய் கர்த்தரைத் துதிக்கிறேன்.

சபையை எடுத்துக்கொள்ள கர்த்தர் சீக்கிரம் வரப் போகிறார். அதற்குள் அவரின் வளர்ச்சிக்குத் தக்க பூரண வளர்ச்சிக்குள் சபையை வளர்க்க மந்தைகளின் மேய்ப்பர்களுக்கென இஃதினை எழுதியிருக்கிறேன்.

இதனை மேய்ப்பர்கள், சபைத் தலைவர்கள் உட்பட ஊழியத்தில் ஈடுபாடு கொண்ட அனைவரும் வாசித்துப் பயனடைய வேண்டும் என்பது எனது விருப்பம்.

இவைகள் என் ஊழியத்திற்கு என கர்த்தரிடமிருந்து ஆலோசனையாய் பெற்றுக் கொண்டவைகள்.

எனது ஊழியத்தில் நான் அனுபவமாய் கற்றுக் கொண்டவைகள்.

இவைகள் உங்கள் சபைக் கட்டுமான பணிக்கு சற்று உதவிடும் என்ற வாஞ்சையில் ஜெபத்தோடு வெளியிடுகிறேன்.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**அ. கிறிஸ்டோபர்.**

## கிருபை தாரும் தேவா!

சபையாம் சரீரத்தின் தலையே!
சபையாம் மாளிகையின் மூலைக்கல்லே!
சபையாம் தோட்டத்தின் எஜமானே!
சபையாம் மந்தையின் மேய்ப்பரே!

எம்தேச சபைகள் வளர்ந்திட!
எம்சபை ஊழியர்கள் உயர்ந்திட!
எம்தேவனே உம்கிருபை கிடைத்திட!
நும்பாதம் இந்நூலை படைக்கிறேன்.

**– அ. கிறிஸ்டோபர்.**



## உள்ளடக்கம்

அதிகாரங்கள்

1. என் இனிய இதயங்களே!
2. என் சபையைக் கட்டுவேன்!
3. என் ஆடுகளை மேய்ப்பாயாக!
4. உன் ஊழியத்தை நிறைவேற்று!
5. நீயோ தேவனுடைய மனுஷனே!

# 1
# என் இனிய இதயங்களே!

என் இனிய வாசகர்களுக்கு இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவில் வளர – கிறிஸ்துவுக்காய் வாழ – கிறிஸ்துவோடு உலாவ, தேவ ஜனம் தன்னை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையில் எனது ஒவ்வொரு நூலையும் வெளியிடுகிறேன்.

பிரசங்கம், ஜெபம், ஆத்தும ஆதாயம், குடும்பம், ஆசாரியத்துவம் – இப்படி பல்வேறு பார்வைகளில் எழுதிய புத்தகங்கள் பல ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளத்தில் மாபெரும் உணர்வை – மகிழ்ச்சியைக் கொண்டு வந்துள்ளது என்று அறிந்து கர்த்தரைத் துதிக்கிறேன்.

பல ஊழியர்கள் 'சபை வளர்ச்சி' என்பதைக் குறித்து நீங்கள் எழுத வேண்டும் என்று கடித வாயிலாகவும் நேரடியாகவும் என்னிடத்தில் கேட்டுக்கொண்டதை பல மாதக்கணக்கில் தேவ சமூகத்தில் வைத்து நான் ஜெபித்ததோடல்லாமல் எனது குழுவினரும் அதற்காக ஜெபித்து வந்தார்கள்.

சபையின் தலையாகிய கிறிஸ்து சபை கட்டி எழுப்புவதைக் குறித்து என்னோடு பகிர்ந்து கொண்டவைகளை இந்த நூலில் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

ஊழியத்தில் அரை நூற்றாண்டுகள் கண்டுவிட்ட ஊழியர்கள் மத்தியில் அரை நூற்றாண்டு வயதைக் கூட எட்டாத எனக்கு இந்நூலை வடிப்பது மிக மிஞ்சிய வேலை என்று தயக்கம் ஏற்பட்ட போது பரிசுத்த ஆவியானவர் எனது கைகளைப் பெலப்படுத்தினார்.

ஊழியத்திற்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்பது முக்கியமல்ல, எப்படி? – எங்கு? ஊழியம் செய்கிறோம் என்பதை வைத்தே அனுபவம் பெருகுகிறது.

கிராமத்தில் அம்மிக்கல்லையும் ஆட்டுக்கல்லையும்



ஒரே நாளில் ஒரு வீட்டுக்காரர் வாங்கினாலும் ஆட்டுக்கல்லை விட அம்மிக்கல் சீக்கிரம் தேய்ந்து விடுகிறது. காரணம் அம்மி தினந்தோறும் பயன்படுத்தப்படுகிறது. ஆட்டுக்கல் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே.

அப்படியே சிலர் குறுகிய காலத்தில் அதிகப் பிரயாசப்படுவதினால் மிகச்சிறந்த பட்டறிவை ஊழியத்தில் கற்றுக் கொள்கிறார்கள். கடந்த 26 ஆண்டுகளுக்கு மேலாய் இந்த முழு நேர ஊழியத்தில் நான் கடந்து வந்த பாதைகள் எனக்குக் கற்றுத் தந்தவைகள் அதிகமானவை. மிகச்சிறந்த தேவ மனிதர்களோடு உடன் ஊழியத்தில் இருந்ததினால் கற்றுக் கொண்டவைகள் இன்னும் அதிகமானவைகள்.

என்னை அழைத்த ஆண்டவர் என் கையைப் பிடித்து நடத்தி வந்த அதிசயமான வழிகள் இன்னும் அதிகமானவைகள். அவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

மிக நீண்ட காலமாக ஊழியம் செய்தும் போதுமான வளர்ச்சி இல்லாமல் வாடும் ஊழியரா நீங்கள்? உங்களுக்கு இதில் ஒரு நற்செய்தி அடங்கியிருக்கிறது.

சபை நன்றாக வளர்ந்து வருகிற வேளையில் சில அப்சலோம்கள் எழும்பி உங்கள் சபை ஆத்துமாக்களை அள்ளிக்கொண்டு போய்விட்டதினால் நொந்து வெந்து தவிக்கும் ஊழியரா நீங்கள்? கவலைப்பட வேண்டாம். வாழை மரம் வெட்ட வெட்ட வளருவது போல் உங்கள் சபை மீண்டும் செழிக்கும். அந்த நிலைக்கு உங்களைத் தூக்கி விடும் செய்தி இதன் உள்ளே இருக்கிறது.

தாவீதின் சாதனையில் புகழாரம் வந்தபோது சவுல் தாங்கமுடியாமல் எதிரியாக மாறினது போல் உமது ஊழிய வளர்ச்சியைத் தாங்க முடியாமல் போன உங்களுக்கு மேலான அதிகாரத்தில் உள்ளவர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? அல்லது பந்தாடப்பட்டு பரிதபிக்கிறீர்களா? கவலையை விடுங்கள். தாவீதுக்கு எல்லாவற்றையும் திரும்பத் தந்தது போல் உங்களுக்கும்

தந்தருள்வார். அதற்கு தகுதிப்படுத்தும் தக்க செய்தி இதில் உண்டு.

தேவன் உங்களைக் கொண்டு செய்ய நினைத்த காரியம் தடைபடாது என்பதை தைரியமாக சொல்ல விரும்புகிறேன். இந்தக் கனமான ஊழியத்திற்கு நீங்களாகவோ அல்லது எந்த மனிதர் அழைத்தோ நீங்கள் வரவில்லை. அவர்தானே உங்களை அழைத்தார். அவர் உங்களை நடுத்தெருவில் விடுவாரா? விடமாட்டார்! விடவே மாட்டார்.

பரலோக இராஜ்யத்தினிமித்தம் சிலர் அண்ணகராய் பிறந்ததுண்டு. ஆக்கப்பட்டவர்களும் உண்டு. ஆக்கிக் கொண்டவர்களும் உண்டு என்ற இயேசுவின் வார்த்தையின்படியே சிலர் ஊழிய அழைப்போடு பிறக்கிறார்கள். சிலர் சிலரால் ஊழியத்திற்கு அமர்த்தப்படுகிறார்கள். சிலர் தாங்களே வசதி வாய்ப்புக்காக ஊழியர் ஆகிறார்கள்.

அழைக்கப்பட்டவர்களுக்கே இதை எழுதுகிறேன். கர்த்தர் உங்களை அழைத்திருப்பாரானால் இந்த (சபை) ஊழியத்தில் நில்லுங்கள். அல்லாத பட்சத்தில் (சபை) ஊழியம் உங்களுக்கு வேண்டாத வேலை.

நீங்கள் அழைக்கப்பட்ட ஊழியர் என்றால் கவலையை விடுங்கள். ஆத்துமாக்கள் இல்லாவிட்டாலும் கவலை வேண்டாம். அழைத்தவர் அதைப் பொறுப்பேற்று செய்வார்.

தாமதமானாலும் சாராளுக்கு ஈசாக்கு பிறப்பான். தருணத்தைத் தவறவிட்டு விட்டாலும் ரூத்துக்கு ஓபேத் பிறப்பான். உங்களை உங்கள் ஊழியத்தில் நிறுத்த, உங்களை விட உங்களை அழைத்தவருக்கு அதிக அக்கறை உண்டு.

என்னோடு ஊழியத்தை ஆரம்பித்தவர்கள் வெகு வேகமாக முன்னேறி விட்டார்களே! நான் நலிந்து போய் உள்ளேனே என்று உங்கள் ஊழியத்தைப் பார்த்து நீங்களே சுய பரிதாபம் கொள்ளாதீர்கள். எவ்வளவு பெரிய ஊழியம் செய்தாய் என்று அல்ல. எவ்வளவு தேவசித்தம்



நிறைவேற்றினாய் என்று தான் ஆண்டவர் கேட்கப்போகிறார்.

எனக்கு திடமான நம்பிக்கை உண்டு. எனது ஊழியப் பாதையில் இரண்டுக்கும் மேற்பட்ட முறை இனி ஊழியமே இல்லை தொலைந்தோம் என்று மூர்ச்சை அடைந்தது உண்டு. அந்த சூழ்நிலையின் முடிவில் ஒன்றை மாத்திரம் புரிந்து கொண்டேன். முடிவு பரியந்தம் நடத்துகிற ஆண்டவர் என் கையைப் பிடித்திருக்கிறார் என்று.

இந்த ஊழியத்தின் பாதையில் நாம் அவரின் கையைப் பிடிக்கவில்லை; அப்படியானால் என்றோ நம் கதை முடிந்திருக்கும். மாறாக அவர் நமது கையைப் பிடித்திருக்கிறார். அதனால் தான் சிங்கக் கெபியிலும் சிதையாமலிருக்கிறோம். அக்கினி சூளையிலும் அழியாமலிக்கிறோம்.

சூரைச் செடியின் கீழிருந்தாலும் சுகமான விருந்து கொடுத்து சுறுசுறுப்போடு ஊழியம் செய்ய வைக்கும் அற்புத ஆண்டவர் நம் இயேசு. சூழ்நிலையைப் பார்த்து போக மாட்டேன் என்று தர்ஷீசுக்கு ஓடினாலும் தத்தளிப்பை உண்டு பண்ணி நினிவேயில் நிறுத்துகிற கரிசனை உள்ளவர் நமது ஆண்டவர்.

உங்களைக் கொண்டு எதை நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் தீர்மானித்து விட்டாரோ, அதை அவர் மாற்றப் போவதில்லை; நீங்கள் விலகி ஓடினாலும் விடப்போவதுமில்லை. உங்களைக் கொண்டே அதை நிறைவேற்றப் போகிறார்.

தென்னாப்பிரிக்காவில் புகழ்பெற்ற போதகராய் பாஸ்டர் J.F. ரோலன்ஸ் திகழ்ந்தார். அவரது ஆரம்ப கால ஊழியம், நாம் மிகவும் கவனித்து சிந்திக்க வேண்டிய காரியம். சபை தரிசனத்தைத் தெளிவாகப் பெற்ற பின் அவர் ஆரம்பித்த சபையில் 7 ஆண்டுகாலம் ஒரு ஆத்துமா கூட வரவில்லை.

இப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலையைக் கண்டு பாஸ்டர் J.F. ரோலன்ஸ் துவண்டு விடவில்லை. இந்த இடம் சரிப்பட்டு வராது என்று வேறு இடத்திற்கு ஓடி

விடவுமில்லை. சூழ்நிலைகள், பாதக சாதகங்கள் இவைகளை விட அழைத்தவர் பெரியவர் என்ற எண்ணத்துடன் வெற்றுக் கட்டிடத்திற்கு 7 ஆண்டுகள் பிரசங்கித்து வந்தார்.

நடந்தது என்ன தெரியுமா? 7 ஆண்டுகளுக்குப் பிறகு பிரசங்கத்தின்போது (வெற்றுக் கட்டிடத்தில்) வெளியிலிருந்து ஒரு கல் வந்து உள்ளே விழுந்தது. பாஸ்டர் J.F. ரோலன்ஸ் அந்தக் கல்லை எடுத்து தனது கையில் வைத்துக்கொண்டு 'கர்த்தாவே இந்தக் கல்லை, வீசியவருக்காய் ஸ்தோத்திரம். அந்த ஆத்துமாவைத் தாரும்' என்று ஜெபித்தார்.

அன்று முதல் கர்த்தர் கிரியை செய்யத்துவங்கினார். அந்தக் கல்லை வீசியவர் இரட்சிக்கப்பட்டு சபை அங்கமானார். அதன் பிறகு அவரது சபை கிடுகிடுவென வளர்ந்து ஆல் போல் கிளைகள் விட்டுப் பெருகியது.

நான் இஃதினை இங்கு எழுதுவதற்கு காரணத்தைக் கண்டு கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் வாழ்க்கையில் பல ஆண்டுகள் உண்மையோடு உழைத்தும் ஒரு ஆத்துமாவும் கிடைக்காததினால் சோர்ந்து போய் விட்டீர்களா? சபை கட்டும் அழைப்பு எனக்கு இல்லையோ என்று கதிகலங்கி விட்டீர்களா?

தேவன் அதனதன் காலத்தில் எதையும் நேர்த்தியாய் செய்கிறவர். உங்களுக்குக் கொடுக்கப்போகிற மிகப்பெரிய சபைக்காக கர்த்தர் உங்களை பாஸ்டர் J.F. ரோலன்ஸைப் போல ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விட வேண்டாம்.

நாற்பது ஆண்டுகள் அரண்மனை வாசம்; சகலத்தையும் கற்றுக் கொண்ட பின்னரோ நாற்பது ஆண்டுகள் ஆடுகளுடன் வனாந்திர வாசம். இவைகளைக் குறித்து மோசே என்ன நினைத்திருப்பாரோ, இடும்புகளை எப்படி சகித்திருப்பாரோ எனக்குத் தெரியாது. ஆனால் அலைந்த அனுபவத்திற்கு நிகராய் நாற்பது ஆண்டுகள் அற்புதமான ஊழியத்தைக் கர்த்தர் கொடுத்தார்.

**நீங்கள் சிறுமைப்பட்ட நாட்களுக்குத் தக்கதாய்**



**தேவன் உங்களை ஊழியத்தில் மகிழ்ச்சியாக்குவார்.**

நம்மை இந்த கனமான ஊழியத்திற்கு அழைத்தவர் கர்த்தரே. இதை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறேன். மனிதனின் (அழைப்பு) வார்த்தைகள் ஆம் என்றும் அல்ல என்றும் இருக்கும். ஆனால் ஆண்டவரின் (அழைப்பு) வார்த்தைகள் ஆம் என்றும் ஆமென் என்றும் அல்லவா இருக்கிறது.

அறுவடை மிகுதி ஆளோ இல்லை என்று பாடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் அறுப்புக்கென்று வந்த உங்களை வேண்டாமென்றோ கொஞ்சம் பொறு என்றோ நமது எஜமான் தயங்குவாரா. நீங்கள் எப்படியிருந்தாலும் உங்களை உங்கள் அழைப்பில் நிறுத்த அவர் வல்லவராயிருக்கிறார்.

தேவன் தமது மந்தையை மேய்க்க உங்களைத் தெரிந்து கொண்டார். அவர் உங்களைத் தம்முடைய இருதயத்துக்கு ஏற்றவராகக்கண்டு அழைத்திருக்கிறார். (எரேமியா 3:15)

**என் இனிய இதயங்களே, அவர் உங்களை "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை. உன் பேரை பிரஸ்தாபப்படுத்து வேன்" என்று அன்புடன் கரம்பற்றி அருளுடன் வாழ்த்துகிறார். ஆசீர்வதிக்கிறார்.**

# 2
# என் சபையைக் கட்டுவேன்!

உச்சரிப்பிலும் எழுத்து வடிவத்திலும் மிகச் சிறிய வார்த்தையாகிய சபை ஆற்றலிலும் மகத்துவத்திலும் மிகப் பெரியதாய்த் திகழ்கிறது. வயதிலும் கூட சபை மிகப்பெரியது தான். நாம் நினைக்கிறபடி பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது பூமியிலே சபை பிரத்தியட்சமாய் உண்டானது என்றாலும் அந்த சபைக்கான அஸ்திபாரம் உலகத்தோற்றத்திற்கு முன்பே போட்டாயிற்று.

எனவே உலகத் தோற்றத்திலிருந்தே சபை என்பது தேவனின் மிக உன்னதமான திட்டம். எனவே நீங்கள் நினைக்கிற படி ஒரு சபையை மிகச் சுலபமாக கட்டி எழுப்பி விட முடியாது. கஷ்டப்பட்டாலும் கட்டி எழுப்ப முடியாது. அதே வேளையில் சபைக்கட்டுவது என்பது மிகப் பெரிய கடினமான வேலையே கிடையாது.

எனது வார்த்தைகள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பது போல் தோன்றலாம். ஆனால் அதை சரியாகவே எழுதி இருக்கிறேன். இயேசு என்ன சொன்னார் தெரியுமா, இந்தக் கல்லின் மீது **என் சபையை நான் கட்டுவேன்** இதில் என் சபை, நான் கட்டுவேன் என்ற பதங்கள் மிக முக்கியம். எனக்கோ உங்களுக்கோ சபையை உரிமை கொண்டாடத் தகுதி இல்லை. எனவே கட்டி எழுப்பும் வல்லமையும் நமக்கு இல்லை.

கர்த்தரின் சபையைக் கர்த்தரே கட்டுகிறார். தேவன் தமது சுய இரத்தத்தால் கிரயமாக வாங்கிய சபை இது. தமது இரத்தத்தைக்கிரயமாகக் கொடுத்து தம்மையே மூலைக்கல்லாக்கி தாமே தமது சபையைக் கட்டுகிறார் என்பதே சிறப்பு அம்சம்.

எனவே உங்களால் சபை கட்ட முடியாது என்பது உண்மையானாலும் உங்களை அழைத்தவர் உங்களைக் கொண்டு தமக்காக தமது சபையைக் கட்டுகிறார் என்பது



பெரிய இரகசியம். நான் பிரயாசப்படுகிறேன் என்று நாம் நினைத்துக்கொண்டு மூளை அறிவிலிருந்து திட்டங்களைத் தீட்டி ஊழியத்தைக் கட்ட நினைப்பதால் தான் நாம் நமது ஊழியத்தில் மிகவும் பின் தங்கி உள்ளோம்.

**தேவ சித்தத்தைத் தெரிந்து செயல்படுக:**

கர்த்தர் சபையைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் பிரயாசம் விருதா, கர்த்தர் சபையைக் காவாராகில் ஊழியர்கள் விழித்திருப்பதும் விருதா, என்பதை அகத்தில் நிறுத்தி வையுங்கள். மாம்சத்தில் பிறப்பது மாம்சமாய் இருக்கும். ஆவியில் பிறப்பது ஆவிக்குரியதாய் இருப்பதோடல்லாமல் மாம்சத்தை ஜெயிக்கிறதாயும் இருக்கும்.

தேவனுடைய திட்டத்தின்படி சபை கட்டும் பணியில் நமது பொறுப்பு என்ன என்பதைத் தெளிவாய் உணருங்கள். நாம் முதன்மை வேலையாள் அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி நாம் **தேவனுக்கு உடன் வேலையாட்கள்.** (I கொரி 3:9) ஆம் தேவன் பிரதானமாய் இருந்து தமது சபையைக் கட்டுகிறார். அந்தப் பணியில் நாம் அவரோடு சேர்ந்து கட்ட அழைக்கப்பட்டிருக்கிறோம் – அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.

எனவே நாம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற சபை ஊழியத்தை சரியான செவ்வையான, கிரமமான முறையில் நிறைவேற்ற வேண்டுமாயின் நமது திட்டங்களையும் ஆசைகளையும் சாதுரியங்களையும் தூக்கி எறிந்து விட்டு பிரதான கட்டிடக் கலைஞரான கர்த்தர் என்ன? எப்படி? கட்ட நினைக்க விரும்புகிறாரோ அப்படியே நிறைவேற்ற நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

ஊழியங்களில் வித்தியாசம் உண்டு. கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலும் வித்தியாசம் உண்டு. எல்லோருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (I கொரி 12:5,6).

இப்படியிருக்க எல்லா இடங்களிலும் தேவன் ஒரே விதமாகவோ அல்லது எல்லோரைக் கொண்டும் ஒரே

விதமாகவோ சபை கட்டுவதில்லை. ஆவியானவர் செய்யும் கிரியை தேவன் பயன்படுத்தும் விதம் இடத்திற்கு இடமும் மனிதருக்கு மனிதரும் வித்தியாசமாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

நான் இங்கு அழுத்தம் திருத்தமாக சொல்ல நினைப்பது என்னவென்றால் உலகிலுள்ள மற்ற சபையைப் போலவோ அல்லது மற்ற சபைத் தலைவர்களின் ஊழியத்தைப் போலவோ தேவன் உங்களைக் கொண்டு செய்ய மாட்டார்.

ஒரு பெரிய சரீரத்தில் வெவ்வேறு அவயங்கள் வெவ்வேறு பணிகளை செய்ய ஏற்படுத்தப்பட்டிருப்பது போலவே, பரலோகத்தில் பேரெழுதியிருக்கிறவர்களின் சர்வ சங்கமாகிய சபையின் அங்கமாகிய பூலோகத்திலுள்ள திருச்சபைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது.

எனவே தேவனுடைய அகராதியில் அல்லது திட்டத்தில் ஒரு பால் யாங்கி சோ – ஒரு பில்லி கிரகாம் தான் உண்டு. இன்று அநேகர் தத்தம் சபைகள் டாக்டர். பால்யாங்கி – சோ சபையைப் போல் மாற வேண்டும் என்று ஜெபிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத காரியம்.

இப்படி ஜெபிப்பது குருட்டு விசுவாசமா அல்லது வறட்டு விசுவாசமா என்று எனக்குப் புரியவில்லை. உங்களைக் கொண்டு உங்கள் பகுதியில் எந்த விதமான ஊழியத்தை நிறைவேற்ற அல்லது சபையைக் கட்ட கர்த்தர் சித்தம் கொண்டுள்ளார் என்பதை முதலில் கண்டுபிடியுங்கள். அந்த சித்தத்தையே உங்கள் மூச்சாகப் பேச்சாக வைத்து செயல்படுங்கள். தேவன் உங்களையும் உங்கள் சபையையும் கட்டத் துவங்குவார்.

**தேவனோடு சஞ்சரியுங்கள்:**

**நீங்கள் உங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை தேவனுடன் சேர்ந்து செய்ய உங்களுக்கும் தேவனுக்கும் இடையிலிருக்கும் உறவின் நெருக்கத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.** எந்தப் போதகர் தேவனோடு சஞ்சரிக்கிறாரோ அவர் தேவனுடைய உடன்



வேலையாளாய்த் திகழ்வார். அவரோடு கர்த்தர் இருந்து அந்த ஊழியத்தைக் கட்டி எழுப்புகிறார் என்பது உண்மை.

குடும்பமோ அல்லது சபையின் அதிகப்படியான ஊழியமோ தேவனோடு உள்ள நமது நெருக்கத்தைக் குறைத்து விட முடியாது. குறைக்கவும் கூடாது. மாறாக **ஊழிய பளு அதிகரிக்க அதிகரிக்க தேவனோடு உறவு கொள்ள நமது மனம் அதிகம் வாஞ்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் சரியான பாதையில்** போய்க்கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

இன்னும் சொல்லப்போனால் குடும்பத்தில் – சபை ஊழியத்தில் நமக்கு ஏற்படும் சுமைகள், பிரச்சனைகள், அலைச்சல்கள் – மன உளைச்சல்கள் போன்றவற்றால் உணர்ச்சிப் பிழம்பாய் உள்ள நமது ஆத்துமாவிற்கு தேவ சமூகமே சுமைகளின் வடிகாலாய் சுகத்தின் வாய்க்காலாய் இருக்கிறது.

குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றுக் கொண்டு ஏனோக்கு தேவனோடு சஞ்சரிப்பதை எண்ணிப் பாருங்கள். ஒரே ஒரு நாள் தேவனோடு சஞ்சரிப்பதை அவன் நிறுத்தியிருந்தாலும் அவனது குடும்பக் காரியம் அவனைக் கீழே தள்ளியிருக்கும் என்று நினைக்கிறேன்.

தேவனோடு அவன் சஞ்சரிப்பதிலே மிகச் சரியாய் நடந்ததினாலே தான் அவன் குடும்ப வாழ்வு மிக சீராய் நடந்து கொண்டிருந்தது. அதைப் போலவே ஆத்துமாக்களைப் பெற்றுக் கொள்ளுகிற வேளையில் அதற்கு இணையாக தேவனோடு சஞ்சரிப்பதை நாம் சமநிலைப்படுத்த வேண்டும். தேவனோடு சஞ்சரிக்கும் நிலையை வைத்தே உங்கள் ஊழியம் நிலைபெறுகிறது என்பதை கவனத்தில் வையுங்கள்.

ஆபத்தான ஒரு காரியத்தை சொல்கிறேன். கவனியுங்கள். ஜெபிக்காமல், தேவனோடு சஞ்சரிக்காமல் உங்களால் ஒரு சபையைக் கட்டி எழுப்பி விட முடியும். இனிய இசைக்கருவிகள், வாடகைப் பிரசங்கிமார்கள், அலங்காரமான இருக்கைகள் அமைக்கப்பட்ட ஒரு ஆலயம் இவைகளை வைத்து ஒரு சபையை நிச்சயமாக எழுப்பிவிட

முடியும்.

ஆனால் அதன் முடிவு என்ன என்பதை உற்றுப்பாருங்கள். இவைகள் மணல்மேல் கட்டப்பட்ட மாளிகைகள், பெருமழை வந்து மோதிய போது மணல் மேல் கட்டின வீடு இடிந்தது என்று இயேசு சொன்ன உவமையின்படியே இந்த ஊழியங்கள் சாதாரணப் பிரச்சினையிலேயே அற்ப ஆயுளில் சுக்கு நூறாக உடைந்து அக்கு வேறாக ஆணி வேறாகப் பிரிந்து போய் விடுகிறது.

**சபையைக் கட்டுவது முக்கியமல்ல அதை சரியான அஸ்திபாரத்தின்மேல் கட்டுவதே முக்கியம். எனவே தேவ சித்தத்தை அறிந்து கொண்ட நீங்கள் உங்கள் கண்ணீரின் ஜெபத்தையே அஸ்திபாரமாக மாற்றுங்கள்.**

கண்ணீரோடு விதைக்கிறவன் கெம்பீரத்தோடு அறுப்பான் என்பது ஏதோ ஒரு சாதாரண வசனம் அல்ல, அல்லது சுவிசேஷ ஊழியத்திற்கு மட்டுமல்ல. சபை ஊழியத்தில் கண்ணீரோடு விதைக்கிறவன் கெம்பீரத்தோடு பலன்களை அறுப்பான் என்பதும் அதன் உள்ளடக்கம்.

**தெளிவான தேவசித்தம் எது என்று தெரிந்தாலும் உங்கள் ஜெபத்தை மாத்திரம் நிறுத்தி விடாதீர்கள். ஒழுங்கான – முறையான ஜெபமே உங்கள் சபை ஊழியத்தின் இரத்த நாளங்கள்.**

தேவ சித்தத்தை மிக சரியாக அறிந்திருந்த இயேசு தமது ஜீவியத்தில் ஜெபிப்பதை விடவில்லை என்பது முக்கியம் அல்ல. ஜெபத்தைத் தள்ளிப் போடவில்லை என்பது தான் முக்கியம். இயேசு தமது ஊழியத்தில் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு காரியத்துக்கும் தன்னை ஊற்றி ஜெபித்தார்.

இரவெல்லாம் தனித்து தேவ சமுகத்தில் ஜெபித்த பின்னரே சீஷர்களை அப்போஸ்தலராகத் தெரிந்தெடுத்தார். (லூக்கா 6:12,13) யோவான் எழுதின சுவிசேஷம் 7ஆம் அதிகாரத்தின் கடைசி வசனத்தையும் 8–ஆம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களையும் சேர்த்து



வாசித்துப் பாருங்கள்.

அவரவர் தங்கள் வீட்டிற்குப் போனார்கள். இயேசு ஒலிவ மலைக்குப் போனார். மறுநாள் காலையில் அவர் தேவாலயத்தில் உபதேசம் பண்ணினார் என்று அழகாக எழுதியிருக்கிறது.

ஆம் ஒரு ஊழியத்தை முடித்தவுடனும் மற்றொரு ஊழியத்தைத் துவங்குமுன்பும் தனது நேரத்தை இயேசுவானவர் ஜெபத்திலேயே செலவிட்டார் என்பது எத்தனை ஆழ்ந்த கருத்து செறிந்தது என்பதை யோசித்துப் பாருங்கள்.

நோவா தேவனோடு சஞ்சரித்தார். தேவன் தனக்குத் தந்த கட்டளையின்படியே ஊழியத்தை (பேழையை) கட்டினார். கர்த்தர் கட்டளையிட ஜீவராசிகள் அனைத்தும் தானாகவே வந்து பேழைக்குட்பட்டன. தேவ சித்தத்தின்படி தேவ ஐக்கியத்தில் நிலைத்து நாம் ஊழியம் செய்தால் கர்த்தரே ஆத்துமாக்களைக் கொண்டு வருவார் என்பதற்கு நோவாவின் பேழை ஒரு நன் மாதிரி.

இயேசு மெய்யான திராட்சைச் செடி, ஊழியர்களாகிய நாம் கொடிகள், ஆத்துமாக்கள் கனிகள், நாம் மிகுந்த கனி (ஆத்துமாக்கள்) உள்ளவர்களாய் இருக்க வேண்டுமாயின் இயேசு சொல்கிறபடி செய்ய வேண்டும்.

'என்னில் நிலைத்திருக்கிற கொடி எதுவோ அது மிகுந்த கனி கொடுக்கும்'. மீண்டும் சொல்கிறேன் தேவனோடு (ஜெபத்தில்) ஐக்கியம் கொள்கிற ஊழியர்களுக்கே கர்த்தர் ஆத்துமாக்களைத் தந்து ஆசீர்வதிக்கிறார்.

நான் இங்கு இரண்டாவதாக முக்கியப்படுத்திக் கூறுவது என்னவென்றால் உங்கள் ஜெபமே உங்கள் ஊழியத்தின் மூலதனமாக இருக்கட்டும். அநேக ஊழியங்கள் வளர்ந்து வருகிற வேளையில் வதங்கி அழிந்து விடுவதற்குக் காரணம் அந்த ஊழியரின் ஜெப நேரம் திருடப்பட்டு விட்டது தான்.

இது மிகப்பெரிய அபாயம். சாத்தானின் மிக ஆழமான

தந்திரம். நமது ஊழியத்தின் வளர்ச்சியைத்தடுப்பதற்கு சாத்தான் பெரும்பாலும் நமக்கு எதிராக நேரடியாக செயல்படுவது இல்லை. மாறாக அதிகப் பொறுப்புகளைக் கொடுத்து (ஆகாத வழக்கில்) சிக்க வைத்து நாம் ஜெபிக்காமலேயே ஊழியம் செய்யும் வித்தையைப் புகுத்தி விடுகிறான்.

இது உண்மை சம்பவம். ஒரு முறை ஒரு ஊழியர் கூட்டம் ஒரு இடத்தில் நடந்தது. அதில் தலைமைப் போதகரானவர் ஒவ்வொரு ஊழியரையும் பார்த்து, 'நீங்கள் எப்பொழுது எவ்வளவு நேரம் ஜெபிக்கிறீர்கள்' என்று கேட்டார். எல்லோரும் தங்கள் அனுபவங்களை சொல்லிக்கொண்டே வந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட ஊழியர் எழுந்து, 'நான் தற்போது ஜெபிப்பதில்லை' என்றார். தலைமைப் போதகர் அதிர்ந்தே போனார். ஏனப்பா ஜெபிப்பதில்லை? என்றார். 'ஒரு நாளைக்கு 24 மணி நேரம் எனக்குப் போதவில்லை. ஊழியம் அதிகம், அலைச்சல் அதிகம்' என்று அவர் முடித்து விட்டார்.

தலைமைப் போதகர் தனது அனுபவத்தைக் கூறி என்ன அலுவல் இருந்தாலும் ஜெப நேரத்தைக் குறைக்காதீர்கள் என்றார். அந்தக் குறிப்பிட்ட ஊழியர் அதை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. என்ன நடந்தது தெரியுமா? சத்துருவின் வலையிலிருந்து அவரால் மீள முடியவில்லை. ஊழியத்தை விட்டு விட்டார். உலக வேலைக்கே சென்று விட்டார்.

முதலாவது உங்கள் ஊழியத்தைக் குறித்த தேவ சித்தத்தை (திட்டத்தை) அறிந்து கொள்ளுங்கள். இரண்டாவதாக ஒவ்வொரு காரியத்தையும் தேவ சமூகத்தில் வையுங்கள். தேவனுக்கே முதலிடம் கொடுங்கள். தேவனுக்கும் உங்களுக்கும் உள்ள உறவை நாள்தோறும் பலப்படுத்துங்கள்.

**தேவ தரிசனம் தேவை:**

மூன்றாவதாக உங்கள் (எதிர்கால) ஊழியத்தைக் குறித்த தரிசனத்தோடு செயல்படுங்கள். தேவ சித்தம் என்பது



வேறு. உங்கள் எதிர்கால தரிசனம் என்பது வேறு.

எந்த இடத்தில் எந்த விதமான ஊழியத்தை எப்படி செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை தேவனிடமிருந்து பெறுவது தேவசித்தம் எனப்படும். தேவன் தந்த ஊழியம் எப்படி வளர வேண்டும், மலர வேண்டும் என்ற உளவாஞ்சை – எதிர்பார்ப்பு தரிசனம் எனப்படும்.

உங்கள் ஊழியம் எப்படி வளர வேண்டும் என்ற தரிசனம் உங்களுக்கு இருக்க வேண்டும். அந்த தரிசனத்தை மனதில் வைத்துக் கொண்டே இலக்கை நோக்கி ஊழியம் செய்ய வேண்டும்.

ஒரு கட்டிடம் கட்டுகிறவர் கட்டிடத்தைக் கட்டத் துவங்கும் முன்பே தான் கட்டப் போகிற கட்டிடம் இப்படி இருக்கும். இத்தனை மாடி இருக்கும். இந்த வண்ணத்தில் இருக்கும் என்ற மனக்கண் காட்சியை வைத்துக்கொண்டுதான் கட்டிடத்தைக் கட்டுகிறார். முடிவில் அப்படியே முழுமை பெற்றதைக் காண்கிறார்.

அநேக சபைகள் வளர்வதில்லை மிளிர்வதுமில்லை காரணம் அந்த ஊழியருக்குத் தரிசனம் இல்லை என்பதே அர்த்தம். இந்த ஆண்டு கர்த்தருக்கென்று 50 அல்லது 500 ஆத்துமாக்களை ஆதாயம் செய்யப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பு கூட இல்லையென்றால் எப்படி ஊழியம் வளரும்.

நமது தரிசனம் எப்படியோ நாமும் அப்படியே!

(WITHOUT VISION WE ACCOMPLISH NOTHING) (WE ARE WHAT OUR VISION IS)

தரிசனம் இல்லாதவன் ஒன்றையும் அடைவதில்லை!

தேவனுடைய திட்டத்தினை வாக்குத்தத்தத்தை விசுவாசக் கண்களால் முழுமை அடைந்த வடிவத்தில் பார்த்து செயல்படுதல் அவசியம். ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்து உன் சந்ததியைப் பெருகச் செய்வேன் என்று நட்சத்திரங்களைக் காட்டிய பொழுது அவைகள் நட்சத்திரங்களாய் அல்ல தனது மகன்களாக – பேரப்பிள்ளைகளாக – கொள்ளுப் பேரன்களாகப் பார்த்து மகிழ்ந்திருப்பார் என்று நம்புகிறேன்.

அப்படியே நெகேமியா எருசலேமின் இடிந்த அலங்கங்களை குப்பை மேடுகளாக அல்ல கட்டி முடிக்கப்பட்ட அலங்கங்களாக முன்கூட்டியே பார்த்திருப்பார் என்று நம்புகிறேன்.

உங்கள் ஊழியத்தைக் குறித்த இலக்கு என்ன? எதிர் காலத்தில் என் ஊழியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இன்று வரை என்றாகிலும் யோசித்ததுண்டா? இல்லையென்றால் உங்கள் ஊழியத்தின் முதல் எதிரி நீங்களே என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இயேசுவின் கேள்விக்கு, 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து', என்று பேதுரு சொன்னதற்கு (மத்தேயு16:16) இயேசு பேதுருவைப் பார்த்து மாம்சமும் இரத்தமும் இதை வெளிப்படுத்தவில்லை. என் பிதா இதை வெளிப்படுத்தினார். இந்தக் கல்லின் மேல் (உனக்கு இருக்கும் இந்த வெளிப்பாட்டின் மேல்) என் சபையைக் கட்டுவேன் என்றார். (மத்தேயு 16:17,18)

ஆம்! அவர் சபையை அவரே கட்டுகிறார். ஆனால் வெளிப்பாடுள்ள பேதுருக்களுக்கே இவைகள் நிறைவேறும். கர்த்தர் உங்களை மகிமையாய்க் கட்டுவார். உங்கள் ஊழியத்தை ஸ்திரமாய்க் கட்டுவார். நமது ஆண்டவர் இடிக்கிறவரல்ல கட்டுகிறவர். ஆம் கட்டுகிறவர் – காயம் கட்டுகிறவர் – திரும்பக் கட்டுகிறவர்.

அவர் என் சபையைக் கட்டுவேன் என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார். அந்த வாக்கு நிறைவேற உங்களின் ஒத்துழைப்பு அவருக்குத் தேவை.

உங்களைக் குறித்த தேவ சித்தத்தை அறிந்து அதன்மேல் நில்லுங்கள்.

உங்களை அழைத்தவரோடு கைகோர்த்துக் கொண்டு ஐக்கியமாய் நில்லுங்கள்.

உங்கள் எதிர்கால ஊழியத்தை முற்றுப் பெற்றதாய் தரிசனத்தில் வைத்து களத்தில் நில்லுங்கள்.

இந்தக் கல்லின் மேல் (உங்கள் தரிசனத்தின் மேல்) கர்த்தர் தமது சபையைக் கட்ட இப்போதே கரத்தை நீட்டுகிறார்.

# 3
# என் ஆடுகளை மேய்ப்பாயாக!

தேவனுடைய சபையை தேவன் மந்தைக்கு ஒப்பிட்டுக் கூறியிருப்பதைக் கவனியுங்கள். உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவிடம் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

இயேசு பேதுருவை அழைத்தபோது மீன்களை (மனுஷரை) பிடிக்க அழைத்தார். ஆனால் ஆடுகளை மேய்க்கும் மிக உன்னதமான பொறுப்பைப் பின்னர் பேதுருவிடம் தேவன் ஒப்படைத்தது மிகக் குறிப்பிடத்தக்கது. மீன்களைப் பிடிப்பது சுவிசேஷ ஊழியம். ஆடுகளை மேய்ப்பதோ சபை ஊழியம்.

அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலர் 20:28 இல் 'தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணியாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்' என்று புத்தி சொல்லியிருப்பதை நன்றாய் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.

சபை ஒரு மந்தை. அதை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கண்காணிகளாக வைத்திருக்கிறார். நாம் நமது ஆடுகளை மேய்த்து கண்காணிக்கிற வரைக்கும் நமது சபையின் வளர்ச்சி ஏறுமுகமே.

அநேக சபைகள் சிதைவதற்கு, ஆடுகள் வியாதிப்படுவதற்கு, ஆடுகள் நசல் கொள்வதற்கு – ஆடுகள் கொள்ளையடிக்கப் படுவதற்குக் காரணம் சபையின் பொறுப்பற்ற கண்காணியே. ஆம் இப்படிப்பட்டவர்கள் சபையை மேய்ப்பதில்லை மாறாக சபையை ஏய்க்கிறார்கள்.

இழிவான ஆதாயம் நிலையான வருமானம் இவைகளுக்காக சபை நடத்துகிறவர்கள் சபையை சுலபத் தவணை முறையில் சாகடிக்கிறார்கள் என்பது தான்

உண்மை. ஆனால் பரிசுத்த ஆவியானவரால் கண்காணியாக வைக்கப்பட்ட மேய்ப்பன் இயேசுகிறிஸ்துவைப் போல் நல்ல மேய்ப்பனாக இருப்பான். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளின் ஜீவனை எடுக்க மாட்டான். மாறாகத் தன் ஜீவனை அவைகளுக்காக கொடுப்பான்.

ஆம் நல்ல மேய்ப்பர் தனது சபையின் வளர்ச்சிக்காக, தனது சபையின் ஆத்துமாக்களுக்காக தனது ஜீவனைப் பணயமாக வைத்து ஜீவனம் பண்ணுவார்.

மேய்ப்பன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு யோவான் 10–ஆம் அதிகாரம் முதல் 15 வசனங்களில் அழகுற இயேசு கூறியிருப்பதை நிதானமாய் வாசித்துப் பாருங்கள். இயேசு சொன்னவைகளை விளக்குவதற்கு முன்பு இந்த உவமை சொல்லப்பட்ட சூழ்நிலையை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.

பலஸ்தீனா தேசத்தில் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை வனாந்தரங்களில் மாதக் கணக்கில் மேய்த்துச் செல்வார்கள். இவர்களின் மந்தைகளுக்கு மிருகங்களினாலும் கொள்ளையர்களினாலும் இராக்காலங்களில் அதிகமான ஆபத்து உண்டு. எனவே இப்படிப்பட்ட வனாந்தரங்களில் ஆங்காங்கே மதில் சுவர் எழுப்பப்பட்டு கதவு போடப்பட்ட தொழுவங்கள் இருக்கும். மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை மொத்தமாக அந்தத் தொழுவத்தில் இராக்காலங்களில் அடைத்து விடுவார்கள். இரவு முழுவதும் காவல்காரர் வாசலில் நிற்பார்.

விடிந்ததும் மேய்ப்பர்களுக்கு வாசல் திறக்கப்படும். அவர்கள் உள்ளே சென்று அவர்கள் ஆடுகளைப் பெயர் சொல்லி (சத்தம் கொடுத்து) அழைப்பார்கள். அவரவர் ஆடுகள் அவரவர் பின்னாக வெளியே செல்லும்.

இந்த உவமையை இயேசு சொன்னதில் மூன்று முக்கிய அம்சங்கள் உண்டு.

1. ஆடுகளைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி அவைகளை தொழுவத்திற்குள் வைக்க வேண்டும்.

2. அவன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்க



வேண்டும்.

3. அவைகளுக்கு முன்னே நடந்து போகிறான்.

**1. ஆடுகளுக்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்க வேண்டும்:**

ஒரு மேய்ப்பன் ஆடுகளை மேய்ப்பதில் முக்கியக் கட்டம் ஆடுகளைப் பாதுகாப்பதே. பொல்லாத மிருகங்களிடமும் கள்வர்களிடமும் அகப்படாமல் அதைப் பட்டியில் அடைத்து வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

பலஸ்தீனா மேய்ப்பர்களைப் போல் சபை மேய்ப்பர்களும், தமது ஆடுகளை ஒவ்வொரு இரவிலும் ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவரின் நிழலில் அடைத்து வைக்க வேண்டும். அவரே நமது வாசலைக் காக்கிறவர். அவரது பாதுகாப்பிலிருக்கும் ஆடுகளுக்கு எந்த சேதமும் கிடையாது.

நாம் அநேக சமயங்களில் ஆடுகளைப் பறி கொடுத்துவிட்டு ‘ஐயோ என் ஆடுகளைத்திருடி விட்டார்களே’ என்று புலம்புகிறோம். வருமுன் காப்பதே அறிவுடைமை. ஆடு திருடும் கூட்டத்தைப்போல் ஆத்துமாக்களைக் கொள்ளையடிக்கும் பொல்லாத ஆட்கள் மலிந்து கிடக்கிற காலம் இது. அரசு மருத்துவமனையில் குழந்தைகள் திருடும் கூட்டம் சில நுழைவது போலவே ஆவிக்குரிய உலகிலும் ஆத்துமாக்களைத் திருடும் கூட்டம் செழித்து வளர்ந்திருக்கிறது.

திருடுகிறவன் ஆட்டை வளர்க்க அல்ல. அதன் பலனைத் தின்று தீர்க்க கொள்ளையடிப்பதைப் போலவே உலக இலாபத்திற்காக ஆத்துமாக்களைத் தள்ளிக்கொண்டு போகும் சிலர் உண்டு. எச்சரிக்கையாயிருங்கள்.

இந்தக் கள்ள ஆட்களின் கரங்களிலிருந்து நமது ஆடுகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. தொழுவத்தில் அடைத்து வாயில் காப்போன் கரத்தில் நமது ஆடுகளைப் பத்திரப்படுத்தினாலும் இந்தக் கொள்ளையர்கள் வாசல் வழியாய் நுழையாமல் வேறு வழியாய் ஏறி வருகிறார்கள் (யோவான் 10:1).

இப்படிப்பட்டவர்களின் கண்கள் நமது ஆடுகளின் மேல் படாமலும் கால்கள் நமது சபையினுள் நுழையாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமை. இத்தகையோர் திடீரென நமது ஆராதனைக்கு வருவார்கள். ‘ஒரு வேலையாய் வந்தேன் அப்படியே உங்களோடு ஆராதிக்க வந்தேன்’ என்று நயமாய் பேசுவார்கள். சாட்சிக்கு இடம் கேட்பார்கள். போகும்போது நமது நான்கு விசுவாசிகளின் விலாசத்தை வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். அத்தோடு கதை முடிந்தது.

உங்களுக்கு முன்பின் தெரியாத எந்த நபரையும் உடனே உங்கள் சபையில் ஏற்றி உங்கள் ஊழியத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கூடுமான வரை ஞாயிறு காலை ஆராதனைகளில் நீங்களே பிரசங்கியுங்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள பாஸ்டர் சுந்தரம் அய்யா அவர்கள், ‘எனது காலை ஆராதனைக்கு காபிரியேல் துாதனே வந்து பிரசங்கத்திற்கு வாய்ப்புக்கேட்டாலும் தரமாட்டேன். என் சபைக்கு நான் தான் தூது கொடுப்பேன்’ என்பார். அது மிகச் சரியே. இயேசுவைக் காட்டிக் கொடுத்தது எதிரிகள் அல்ல. கூட இருந்த, அவர் தெரிந்து கொண்ட யூதாசே என்பதை நினைத்துப் பார்க்கும்போது எவ்வளவு பயங்கரமாய் இருக்கிறது பார்த்தீர்களா?

நான் இந்தக் காரியத்தில் அனுபவப்பூர்வமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறேன். மிகவும் நல்லவர் என்று ஒருவரை நம்பி அடிக்கடி என் சபைக்கு அழைத்தேன். என் சபை விசுவாசிகளோடு பழக விட்டேன். ஆனால் ஒரு நாள் பேரிடி என் தலையில் விழுந்தது. நல்லவர் நயவஞ்சகரானார். நல்ல விசுவாசிகளைப் பிரித்து சென்று சபையைத் துவக்கி விட்டார். பட்டபின் ஞானி என்பார்கள். தற்போது ஞானியாகும் அனுபவம் வந்துவிட்டது.

கள்ள ஆட்களின் பிடியிலிருந்து மாத்திரமல்ல. ஓநாய்கள் வருகிறபோதும் ஆடுகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. விசுவாசிகளின் குடும்பத்தில் ஏற்படும் வியாதி – வறுமை – இழப்பு – நெருக்கம் போன்ற



ஓநாய்களின் வாயிலிருந்து நாம் தாம் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

மேய்ப்பனாகிய தாவீது சவுலிடத்தில் சொன்னவைகள் நினைவிருக்கிறதா? ‘என் தகப்பனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு விசை சிங்கமும் ஒரு விசை கரடியும் வந்து மந்தையிலிருக்கிற ஆட்டை பிடித்துச் சென்றது. நான் அதைத் தொடர்ந்து போய் அதை அடித்து ஆட்டை அதன் வாய்க்குத் தப்புவித்தேன்’ (I சாமு 17:34,35)

நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். எவ்வளவு பெரிய உண்மை பார்த்தீர்களா! விசுவாசிகள் குடும்பத்தில் ஏற்படும் தாளாப் பிரச்சனையில் நாம் அவர்களைக் குறித்து கரிசனை இல்லாமல் வாளா இருந்து விட்டால் நமது சபை நாளடைவில் வியாதிப்பட்டு மரித்து விடும்.

அவர்களுக்காய் உபவாசித்து ஆவிக்குரிய யுத்தம் பண்ணி அவர்களுக்கு இளைப்பாறுதலைப் பெற்றுத்தர வேண்டியது நமது கடமை. அவர்கள் நல்ல நிலையில் இருக்கும்போது அவர்களை அடிக்கடி சென்று பார்த்துவிட்டு நெருக்கடி வந்தவுடன் நாம் விலகிக் கொண்டால் நாம் தகப்பனின் ஆடுகளை மேய்க்கிறவர்கள் அல்ல. கூலிக்கு வேலை செய்கிறவர்கள் என்று அர்த்தம். சபை வளரமுடியாது.

கர்த்தர் நல்லவர், விடுவிக்கிறவர், சுகப்படுத்துகிறவர் என்றெல்லாம் நற்செய்தி அறிவித்து சபைக்குள் வேகமாக ஆத்துமாக்களைக் கொண்டு வருகிறோம். ஆனால் அதன்பின் அவர்கள் பிரச்சினை தீர அவ்வளவாக அக்கறை காட்டுவது இல்லை. மிகுந்த எதிர்பார்ப்போடும் விசுவாசத்தோடும் கிறிஸ்துவுக்குள்ளும் சபைக்குள்ளும் வேகமாய் வந்த ஆத்துமாக்கள் இந்நிலையினால் சோர்ந்து நொந்து மீண்டும் தங்களின் பழைய நிலைக்கே போய் விடுகிறார்கள்.

இங்கே தான் சபையின் வீழ்ச்சி ஆரம்பமாகிறது. நாம் எத்தனை ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தோம் என்பது முக்கியமல்ல. எத்தனை பேரை கிறிஸ்துவுக்குள்

ஸ்திரப்படுத்தினோம் என்பதுதான் முக்கியம்.

இப்படி அற்ப ஆயுளில் ஆத்துமாக்கள் ஆவிக்குரிய மரணம் அடைவதை நாம் தடுக்காத பட்சத்தில் மாதா மாதம் கன்வென்ஷன் கூட்டங்கள் வைத்தாலும் சபையில் ஆத்துமாக்கள் பெருகாது. முதலில் கன்வென்ஷன்களை நிறுத்துங்கள். உடனே உபவாச ஜெபத்தை நடத்துங்கள்.

நலிந்த நொந்து போயுள்ள ஆடுகளை சபையில் கூட்டுங்கள். அவர்களின் காயங்களைக் கட்டுங்கள் – ஆற்றித்தேற்றுங்கள். இதுவே நீங்கள் செய்ய வேண்டிய பிரதான கடமை. அதற்காக உங்கள் சுகம், பணம், நேரம் ஆகியவற்றைத் தியாகம் செய்து பாருங்கள். அவர்கள் பலப்பட்டு விட்டால் ஆடுகளுக்காக நீங்கள் போக வேண்டியது இல்லை. அவர்களே குட்டி போடுவார்கள்.

**2. மேய்ப்பன் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கிறான்.**

'அவன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான்'. (யோவான் 10:3)

இந்த வசனங்களை நீங்கள் யோசித்துப் பார்த்ததுண்டா? ஒரு மந்தையில் எத்தனை ஆடுகள் இருந்தாலும் ஒரு நல்ல மேய்ப்பன் அவைகள் ஒவ்வொன்றையும் பெயர் சொல்லி அழைக்கிறான். அந்த ஆடுகளும் அவன் சத்தத்திற்குத்தான் செவி கொடுக்கின்றனவாம்.

என்ன அற்புதமான ஐக்கியம் பார்த்தீர்களா! மேய்ப்பன் ஆடுகளின் பெயரை அறிந்திருக்கிறான். ஆடுகள் மேய்ப்பனின் குரலை அறிந்திருக்கிறது. ஆனால் சில சபைகளில் பல ஆண்டு காலமாக வருகிற விசுவாசிகளின் பேர் கூட போதகருக்குத் தெரிவதில்லை. பல ஆண்டுகளாக சபைக்கு வருகிற விசுவாசிகளுக்கு பாஸ்டரம்மா யாரென்று கூடத் தெரிவதில்லை.

இப்படி ஐக்கியம் இருந்தால் சபை வளருமா? விசுவாசிகள் வளருவார்களா? அவர்கள் எந்த நிலையில்



ஆவியிலிருக்கிறார்கள் என்பதை போதகரால் அறியத்தான் முடியுமா? அன்பு போதகரே! உங்கள் ஆடுகளின் நிலையை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். அல்லாவிட்டால் ஞாயிறு ஆராதனையில் நீங்கள் அளிக்கும் தீவனம் அவைகளுக்கு அஜீரணத்தை உண்டுபண்ணிவிடும்.

ஒரு புத்தகத்தில் வாசித்ததை இங்கு எழுதுகிறேன். சில ஊழியர்கள் வயல்வெளி வழியாய் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அங்கே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பன் ஒருவன் 'வெள்ளச்சி' என்று குரல் கொடுத்தானாம். உடனே ஒரு ஆடு மே என்று கத்திக்கொண்டு அருகில் வந்ததாம்.

இந்த ஊழியர்களுக்கு மிகுந்த ஆச்சரியம். அந்த மேய்ப்பனை விசாரித்தார்கள். 'எல்லா ஆடுகளுக்கும் பெயர் வைத்திருக்கிறேன். அதைச் சொல்லித்தான் கூப்பிடுவேன்' என்று அவன் சொன்னான். இவர்கள் பல ஆடுகளின் பெயர்களைக் கேட்டு தெரிந்து கொண்டு மேய்ப்பனைப் போலக் கூப்பிட்டார்கள். ஊஹூம் பதில் இல்லை. ஆனால் அதே பெயர்களை அந்த மேய்ப்பன் கூப்பிட்டபோது மே என்று கத்திக்கொண்டு ஒவ்வொன்றாய் தலையைத் தூக்கிப் பார்த்தனவாம்.

நாங்கள் கூப்பிட்டால் ஏன் உன் ஆடுகள் குரல் கொடுக்க வில்லை என்று ஊழியர்கள் உற்சாகமிழந்து போய்க் கேட்டார்கள். 'என் ஆடுகள் என் குரலை அறிந்திருக்கிறது' என அவன் பெருமிதமாய் சொன்னான்.

வேதம் உண்மையானது. எதையும் கூட்டிச் சேர்த்துச் சொல்வதில்லை. உங்கள் விசுவாசிகளுக்கும் உங்களுக்கும் இப்படிப்பட்ட ஐக்கியம் இருக்க வேண்டும். இப்படிப் பரிட்சயமான ஐக்கியம் இருந்தால் உங்கள் ஆடுகள் ஓடாது. வேலி தாண்டாது என்பது உண்மையிலும் உண்மை.

நாங்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகள் – ஊழியர்கள், என்றெல்லாம் நாம் மேன்மை பாராட்டி பிரசங்கம் செய்வதை நம் மக்கள் அப்படியே நம்பி விடுகிறார்கள். எனவே நம்மைத் தூக்கி மிக உயர்ந்த இடத்தில் தங்கள்

இருதயத்தில் வைத்துக் கொள்கிறார்கள்.

பாஸ்டர் நம்ம வீட்டுக்கு வரமாட்டாரா? நமக்காக ஜெபிக்க மாட்டாரா? நமது குடும்பத்தோடு பழக மாட்டாரா? என்று நமது விசுவாசிகள் ஆசைப்படுகிறார்கள். ஒவ்வொரு உள்ளமும் நமது பாதங்கள் அவர்கள் வீட்டில் பட வேண்டும் எனத் துடிக்கிறது.

எனவே அன்பான போதகரே! உங்கள் சபைக்குள் ஒருமுறை ஒரு ஆத்துமா உள்ளே நுழைந்தால் உங்கள் அன்பினாலும் ஐக்கியத்தினாலும் அவர்களை அப்படியே கட்டிப் போட்டு விட வேண்டும். அவர்களை சந்தித்து விசாரித்து காரியங்களை மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதிருந்தே ஜெபிக்கத் துவங்கி விட வேண்டும்.

நாம் நமது விசுவாசிகளை நேசிக்கிறோம் என்பதை எப்படி வெளிப்படுத்துவது? அவர்களை அவர்கள் வீட்டில் சந்திப்பதை விட சிறந்த வழி இல்லை. கிரமமான வீடு சந்திப்பு போதகருக்கும் விசுவாசிகளுக்கும் இடையில் மிகச் சிறப்பான ஐக்கியத்தை வளர்க்கும்.

எந்தப் போதகர் தனது விசுவாசக் குடும்பங்களை முறையான கால இடைவெளியில் சந்திக்கிறாரோ அவரது சபை நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல் இருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகம் என்பதே கிடையாது.

முந்தின அதிகாரத்தில் உங்கள் ஜெபமே உங்கள் ஊழியத்தின் இரத்த நாளங்கள் என்று எழுதியிருந்தேன். இந்த அதிகாரத்தில், உங்கள் வீடு சந்திப்பு ஊழியமே உங்கள் ஊழிய வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன். வீடு சந்திப்பு ஊழியத்தைப் போல வீரியமான ஊழிய வளர்ச்சி முறை ஏதுமில்லை. ஒரே காரியத்தில் பல அம்சங்கள் இதனால் நிறைவேறுகிறது.

**வீடு சந்திப்பின் விளைவுகள்**

அ. நீங்கள் யாரென்பதை உங்கள் விசுவாசிகள் புரிந்து கொள்ள வழி வகுக்கிறது.



ஆ. உங்கள் விசுவாசிகள் யார் அவர்களின் குடும்ப நிலை சூழ்நிலை என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள உதவுகிறது.

இ. ஆராதனை நேரங்களில் அதிக நேரங்கள் எடுத்து அவர்களோடு பேச முடியாத நமக்கு, வீடு சந்திப்பின் போது அமர்ந்து அவர்களோடு பேசுவதால் தான் நட்புறவு, குடும்ப உறவு ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது.

ஈ. நமது போதகர் நமது குடும்பத்தை விசாரிக்கிறார், அவர் ஜெபிப்பார் என்கிற நம்பிக்கையும் எழுச்சியும் பிடிப்பும் விசுவாசிகளுக்கு உண்டாகிறது.

உ. தனியாகக் குடும்பப் பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து புத்தி சொல்ல, உற்சாகப் படுத்த, கண்டிக்க, இந்த நேரம் மிகவும் பயனுள்ளதாய் இருக்கிறது.

இந்த வீடு சந்திப்புகளில் கவனிக்க வேண்டிய சில அம்சங்கள் உண்டு. சகலமும் ஒழுங்காகவும் கிரமமாகவும் செய்யப்பட வேண்டும். இந்தப் பிரமாணத்தை எந்தக் காரியத்தில் மீறினாலும் அங்கே விபரீதமும் விபத்தும் ஏற்பட்டு விடுகிறது. கவனம் தேவை. வீடு சந்திப்பின் போது நீங்கள் கவனிக்க வேண்டிய சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

**சரியான விதத்தில் சரியான நேரத்தில் போங்கள்.**

பொதுவாக விசுவாசிகளின் உணவு வேளை, உறக்க வேளை இவைகளைத் தவிர்த்து மற்ற நேரங்களையே வீடு சந்திப்பிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். கூடுமானால் நாம் சந்திக்கப் போகும் வீட்டாருக்கு எது வசதியான நேரம் என்பதைக் கேட்டு அறிந்து வைத்துக் கொண்டு அந்தக் குறிப்பிட்ட வேளைகளிலே அவர்களை சந்திக்க வேண்டும்.

பெண்கள் தனியாக இருக்கும் வீடுகள் – வேளைகள் இவைகளை மிகவும் கவனமாக யோசித்து ஞானமாக அவர்தம் வீடுகளை சந்திக்க வேண்டும். கூடுமானவரை தனியாகச் செல்லாமல் சொந்த மனைவியை அல்லது உடன் ஊழியரை அழைத்துச் செல்வது உத்தமம்.

அல்லாத பட்சத்தில் வீணான புரளிகள் நிமித்தம் உங்கள் பெயரும் நீங்கள் சந்திக்கும் வீட்டாரின் பெயரும்

கெடலாம். சில வேளைகளில் சோதனையில் சிக்குண்டு விழவும் வாய்ப்புண்டு. இப்படிப் பலர் தங்கள் ஊழியத்தை விட்டே போய்விட்ட பரிதாப சம்பவங்கள் உண்டு.

குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அல்லது கணவன் மனைவிக்குப் புத்தி சொல்ல, குடும்பத்திலுள்ள வாலிப மக்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் உங்கள் வீடு சந்திப்பு இருக்குமாயின் நீங்கள் தனியாகச் செல்வதே உத்தமம். எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு விசுவாசியை அழைத்துக் கொண்டு செல்லாதீர்கள். அப்படி செய்வது / செல்வது அந்தக் குடும்பத்தாருக்கு சங்கடத்தையும் நாம் அழைத்து செல்லும் விசுவாசிக்கு மிதமிஞ்சின எண்ணத்தையும் உண்டு பண்ணி, இடறலையும் கொண்டு வரும்.

**குடும்ப ஐக்கியத்தை நாடிப் போங்கள்.**

உங்கள் விசுவாசக் குடும்பத்திலுள்ள அனைவரின் பெயரையும் உறவு முறையையும் நீங்கள் தெரிந்து வைத்திருப்பது மிகச்சிறந்தது. நீங்கள் வீட்டிற்குள் நுழைந்தவுடன் குடும்ப நபர்களின் பெயர்களைச் சொல்லிக் கேட்டு விசாரித்தால் அந்த வீட்டார் எப்படி மகிழ்வார்கள் தெரியுமா? அப்பப்பா உங்கள் மேல் உயிரையே விட்டு விடுவார்கள்.

நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கிறான். ஒரு குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர் பெயர்களையும் நீங்கள் அறிந்து இருந்தால்தானே அவர்களுக்காய் கருத்தாய் ஜெபிக்க முடியும். அந்த நம்பிக்கை அப்பொழுதுதான் விசுவாசிகளுக்கு உங்கள் மேல் வரும்.

என்னுடைய ஆடுகளின் பெயர்கள் மட்டுமல்ல. ஆட்டுக்குட்டிகளின் பெயர்களும் எனக்கு அத்துபடி. எனது விசுவாச மக்களை சந்திக்க வீடுகளுக்குச் செல்லும்போது அந்தக் குடும்ப அங்கத்தினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுத்தான் விசாரிப்பேன் பிள்ளைகளின் பெயர்களை சொல்லித்தான் ஜெபிப்பேன் எனவே எனது விசுவாச மக்கள்



குடும்ப அன்பிலே என்னோடு கட்டப்பட்டுள்ளனர்.

எனது சபையை நான் பொறுப்பேற்கும்போது மிக குறைவான விசுவாசிகளே இருந்தனர். இன்று கணிசமான அங்கத்தினர்களைப் பெற்று சபை வளர்ந்ததற்குரிய பல காரணங்களில் எனது அணுகுமுறையும் ஒன்று.

முதலில் எல்லா விசுவாசக் குடும்பத்தினரைக் குறித்த விவரங்களை பெயர், வயது பிறந்த தேதி திருமண நாள் என்ற அம்சங்களோடு சேகரித்து அதை முறையாக ஒரு நாட்குறிப்பில் தொகுத்துவிட்டேன்.

ஒவ்வொரு நாளும் எனது விசுவாச மக்களுக்காக ஜெபிப்பது மாத்திரமல்ல. எனது நாட்குறிப்பில் உள்ள பதிவின்படி அவர்கள் பிறந்த நாள் – திருமண நாள் இவைகளில் நேரில் சென்று ஜெபித்து வாழ்த்துவேன். இந்த அணுகுமுறை எனது சபை மக்களை என்னோடு வெகு இறுக்கமாக இணைத்து விட்டது.

பலருக்குத் தங்கள் வீட்டில் என்ன விசேஷம் என்று நான் போய் அங்கு ஜெபிக்கும்போது தான் தெரியும். இளையவர்களை வாழ்த்தி ஜெபிக்கச் செல்லும்போது வெறுங்கையாய் செல்லாமல் அவர்கள் மகிழும்படி மிக சொற்ப பணத்தில் எதையாகிலும் வாங்கிச்செல்வேன். அது சொற்ப மதிப்பாக இருந்தாலும் 'நம்ம பாஸ்டர் வாங்கி வந்தது' என்று அவர்கள் கொள்ளும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது.

இதனால் என்னை அவர்கள் அந்நியராக நினையாமல் குடும்பத்தில் ஒருவராகவே நினைக்கிறார்கள். எனக்கு ஏதாகிலும் ஒன்று என்றால் கண்ணீர் விட்டுக் கதறி விடுவார்கள். 'நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்' என்ற யோவான் 10:15–ஆம் வசனம் இங்கே என் நினைவுக்கு வருகிறது.

இப்பொழுது, சபை வளர்ச்சி – எனது உடல் தளர்ச்சி இலக்கியப்பணி, கன்வென்ஷன் கூட்டங்கள் இவைகள் நிமித்தம் தற்போது மேற்சொன்னவைகளை சரியாகச் செய்ய

முடியாத சூழ்நிலைகள் ஏற்படுவது உண்டு. ஆனால் எங்கள் சபையார் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார்கள். அன்பு சகலத்தையும் தாங்குகிறது.

அன்புப் போதகரே! உங்கள் சொந்தக் குடும்பத்தை நேசிப்பது போல உங்கள் சபையை நேசித்துப் பாருங்கள். அப்பொழுது உங்கள் சபை வறட்சியான காலத்திலும் தப்பாமல் கனிதரும் விருட்சத்தைப் போல இருக்கும்.

**சரியான முறையோடு போங்கள்.**

வீடு சந்திக்கும் முறையில் நல்ல மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். நமது முந்தைய சந்ததி செய்த முறைமையின்படி நாம் வீடு சந்தித்தால் தற்காலத்தில் ஒத்து வராது. 50—களில் ஊருக்கு ஒரு குடும்பம். ஒரு குடும்பத்திற்கும் மற்றொரு குடும்பத்திற்கும் இடையில் பல பத்து மைல்கள் தூரம் இருக்கும். இவர்கள் சபைக்கு ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே கலந்து கொள்ள முடியும். அதுவும் மலைப்பகுதிகளில் வசிப்போர் ஞாயிறு காலை கூட வரமுடியாது என்ற நிலை இருந்தது.

அந்தக் கால ஊழியர் ஒரு வீட்டுக்குச் சென்று பார்த்துப் பேசி புசித்துத் தங்கி விடிந்த பின் எழுந்து அடுத்த வீட்டுக்குச் செல்வார். தங்குகிற அந்த வீட்டில், அப்போஸ்தலனாகிய பவுல் நடுராத்திரி வரை பிரசங்கித்தது போலப் பிரசங்கிப்பார். திங்கள் முதல் சனி வரை இந்தத் தொலைதூர வீடு சந்திப்பு நடத்தி விட்டு ஞாயிறு அன்று சபைக்கு (முடிந்தால்) வருவார்.

இப்பொழுது அப்படித் தேவையில்லை. ஒரு நீண்ட பிரசங்கம் அவசியமில்லை. இராத்தங்க வேண்டியதுமில்லை. காலம் மாறிவிட்டது. ஞாயிறு காலை ஆராதனையில், புதன் வேத பாடத்தில், வாரத்தின் எல்லா நாட்களிலும் வானொலியில், எண்ணற்ற ஆவிக்குரிய புத்தகங்களில் போதுமான சத்தியங்களை மக்கள் அறிந்து கொள்கிறார்கள். உங்கள் வீடு சந்திப்புகளில் விசுவாசிகள் எதிர்பார்ப்பது பிரசங்கத்தை அல்ல. உங்கள் அன்பையும் ஆறுதலான வார்த்தைகளையுமே. அதைத் தருவதில் குறைவு



ஏற்படக்கூடாது.

**உதவும் நோக்கத்தோடு போங்கள்.**

மாதத்தில் எந்த நாளிலும் அவர்கள் வீடுகளை சந்திக்கலாம். ஆனால் கடமைக்காகவோ காணிக்கைக்காகவோ உங்கள் வீடு சந்திப்புகள் இருக்கக் கூடாது. அப்படி செய்தால் வெகு விரைவில் கதவுகள் தானாக அடைபட்டு விடும். மறந்து விடாதீர்கள்.

மாறாக விசுவாசத்தில் பலவீனரைத் தாங்குங்கள் என்ற வசனத்தையும், ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடு போங்கள் குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன (யாக்கோபு 2:15,16) என்ற வசனத்தை சிந்தித்து செயல்படுங்கள்.

விசுவாசிகளின் துன்பகரமான சூழ்நிலையைப் பார்த்து விட்டு பரிதாபமான குரலில் ஜெபித்து விட்டு வருவது பெரிய காரியம் அல்ல. கிரியையில்லாத விசுவாசம் செத்தது. ஆபத்தில் உதவவே நாம் இருக்கிறோம். ஜெபத்தின் மூலம் விசுவாசிகளின் பிரச்சனையை மாற்றுவது மாத்திரமல்ல, ஈகையினாலும் மாற்ற வேண்டும்.

செலவு பண்ணப்பட மாத்திரமல்ல செலவு பண்ணவும் ஊழியக்காரன் தெரிந்து வைத்திருக்க வேண்டும். வியாதிப் படுக்கையிலிருக்கும் விசுவாசி வீட்டிற்கு உங்கள் வீட்டிலிருந்து ஒருவேளை சாப்பாட்டை நீங்கள் அனுப்பி வைக்கலாமே. அல்லது வியாதியினிமித்தம் பிரச்சனையினிமித்தம் வேலைக்குச் செல்ல முடியாமலிருக்கும் தேவை உள்ள விசுவாசிக்கு ஒரு சிறு தொகையினைக் கையில் கொடுத்துவிட்டு வரலாமே.

உங்கள் அன்புள்ள ஈகை உங்கள் ஊழிய வளர்ச்சிக்கு கிரியா ஊக்கி என்பதை மறந்துவிடாதீர்கள். வீடு சந்திப்புகள் வாங்குவதற்கு மாத்திரமல்ல கொடுக்கவும் என்று

விசுவாசியுங்கள்.

**3. மேய்ப்பன் முன்னே நடந்து செல்ல வேண்டும்.**

அவன் தன் ஆடுகளை வெளியே விட்ட பின்பு அவைகளுக்கு முன்னே நடந்து போகிறான் என்கிற இயேசுவின் வார்த்தை (யோவான் 10:4) மிகவும் முக்கியமான ஒன்று. மேய்ப்பன் தனது மந்தையைக் காக்கும்படி மந்தைக்கு எப்பக்கத்திலும் நிற்கலாம். ஆனால் மந்தையை முன்நோக்கி நடத்த வேண்டுமென்றால் மேய்ப்பனானவன் கண்டிப்பாக மந்தையின் முன்பாகத்தான் நடந்து செல்ல வேண்டும்.

**எந்த மேய்ப்பனும் தான் நின்று கொண்டு ஒரு திசையை நோக்கி விரல் நீட்டிக் காட்டி தன் மந்தையை நடத்த முடியாது. மேய்ப்பன் எந்த வழியில் நடக்கிறானோ அதன் பின்னே தான் ஆடுகள் செல்லும் என்பது இயற்கையின் விதி.**

உங்கள் விசுவாச மக்கள் வளர உங்கள் சபை கட்டியெழுப்பப்பட நீங்கள் எல்லாவற்றிலும் மந்தைக்கு முன்பாக (முன் மாதிரியாக) நடக்க வேண்டியது மிகவும் அவசியம். 'மந்தைக்கு மாதிரியாயிரு' என்ற I பேதுரு 5:3–ஆம் வசனத்தை ஒவ்வொரு மேய்ப்பனும் தனது ஜீவியத்தின் அனுபவமாகக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

'நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள். ஏனென்றால் அவர்கள் சொல்லுகிறார்கள் சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்' (மத்தேயு 23:3) என்று வேதபாரகர் பரிசேயர் என்பவர்களைக் குறித்து சொன்னது எத்தனை பரிதாபமானது பார்த்தீர்களா.

இத்தகைய வேதபாரகர்களின் தொகை ஆவிக்குரிய உலகத்தில் அதிகரித்து வருவது மிகக் கவலையை அளிக்கிறது. அநேகர் பரலோகமே பூமிக்கு இறங்கி வருவது போல் பேசுகிறார்கள். ஆனால் சொந்த வாழ்க்கையில் கடைபிடிப்பது இல்லை. இப்படி சொல் ஒன்றும் செயல்



ஒன்றுமாய் இருப்பது நமது ஊழியத்திற்கு எதிரான எலும்புருக்கி நோய் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'நீ பேசுவதை நீயே செய் இல்லாவிட்டால் நீ செய்வதை இன்னொருவன் பேசுவான்' என்ற முதுமொழிக்கு ஏற்ப எனது அருமை ஊழியரே நீர் செய்வதும் சொல்வதும் ஒன்று போல் இல்லாமல் இருந்தால் உங்கள் விசுவாசிகள் இதைப் பேசியே சீரழிந்து விடுவார்கள்.

என்னைப் பின்பற்றுங்கள் என்று தனது ஆவிக்குரிய வாழ்வை முன்மாதிரியாக நடத்திக் காண்பித்த பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியதை கவனித்துப் பாருங்கள். 'நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு' (I தீமோ 4:12) என்று கட்டளையிட்டது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றொரு போதக நிருபமாகிய தீத்து 2:7–இல் 'நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி' என அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

பவுல், தீமோத்தேயு, தீத்து இவர்களின் வாழ்வியலில் நமக்கு மிகப்பெரிய பாடம் உண்டு. சபைக்கு முன்பு எங்களைப் பின்பற்றுங்கள் என்று நாம் சொல்லும் அளவிற்கு நமது ஜீவியம் திறந்த புத்தகமாக சிறந்த அனுபவமாக இருக்க வேண்டும்.

பிரசங்கத்தில் அல்லது உடை உடுத்துவதில் அல்ல, பவுல் சொல்லுகிறபடி எல்லாவற்றிலும் சபைக்கு முன் மாதிரியாகப் போதகர் நடந்திடல் அவசியம். குறிப்பாகப் பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னபடி **வார்த்தையில், நடக்கையில், அன்பில், கற்பில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.**

ஒரு மேய்ப்பன் எவ்வழியோ ஆடுகள் அவ்வழியே என்பது அனுபவப் பூர்வமான உண்மை. ஒரு மேய்ப்பர் ஜெப ஆவியில் நிறைந்திருந்தால் அந்த சபையில் 90% நிச்சயம் ஜெபவீரர்கள் நிறைந்து இருப்பார்கள். ஒரு போதகர் சிறந்த பிரசங்கி என்றால் அவர் சபையில் 90% நிச்சயம் மிகச்சிறந்த பிரசங்கிமார்கள் இருப்பார்கள்.

அதே வேளையில் ஒரு போதகர் எந்த பெலவீனத்தில் சிக்குண்டிருக்கிறாரோ அவரது சபையில் பெரும்பாலானோர் அதே பலவீனத்தில் விழுந்து விடுவர். நாம் வார்த்தையிலும் நடக்கையிலும் விசுவாசிகள்முன் மாதிரியாக இருக்க வேண்டும். (நடிக்க வேண்டும் என்பதல்ல) அல்லாத பட்சத்தில், நமது பிரசங்கத்தால் அவர்களை மாற்ற முடியாது, ஊழியத்தைக் கட்டி எழுப்ப முடியாது.

பிறர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதையே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள் என்ற வசனத்தை சற்று வேறு விதமாகக் கூற விரும்புகிறேன். **உங்கள் சபையார் எதை செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதையே அவர்களுக்கு முன்பாக செய்யுங்கள்'** நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டிரு' (I தீமோ 4:15) என்று பவுல் கூறுகிறார்.

ஜெபிப்பதிலும் ஆராதிப்பதிலும் மற்றவரிடத்தில் அன்பு பாராட்டுவதிலும், கொடுப்பதிலும் நீங்கள் விசுவாசிகளுக்கு முன் (மாதிரியாக) செல்லுங்கள். நீங்கள் எப்படியோ அப்படியே உங்கள் சபை மக்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

எனக்கன்பானவர்களே! தேவன் தமது சுய இரத்தத்தினால் வாங்கிய சபையை மேய்க்க உங்களை நியமித்து 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்று உக்கிராணத்துவத்தை நமது கையில் அளித்துள்ளார்.

நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கிற நாள் வெகு சமீபத்திலுள்ளது. உன் மந்தையின் மேல் கவனமாயிரு என்று நீதிமொழிகள் புத்தகத்திலும், மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! என்று சகரியா 11:17–இலும் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் மந்தையை மனப்பூர்வமாய், உற்சாக மனதோடு மேய்த்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (I பேதுரு 5:4)

# 4
# உன் ஊழியத்தை நிறைவேற்று!

என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அங்கீகாரம் வழங்கினார். பரிசுத்த ஆவியானவரோ அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் 'உன் ஊழியத்தை நிறைவேற்று' என்று ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி இந்தக் கனமான ஊழியத்திற்கு அழைத்த அதே வேளையில் நமக்கென்று ஒரு ஊழியத்தையும், அதற்கென்று ஒரு இடத்தையும் எல்லைக் குறித்திருக்கிறார்.

நாம் எது செய்தாலும், எங்கு செய்தாலும், அவைகள் ஊழியம் என்றாகி விடாது. அதிசயங்கள் செய்யலாம். தீர்க்க தரிசனம் சொல்லலாம். ஆனால் அது நம்மைக் குறித்த தேவ சித்தமா என்று அறிந்து செயல்பட வேண்டும். அல்லாத பட்சத்தில் அவர் வருகையின் நாளில் நீங்கள் வெட்கப்பட்டுப் போவீர்கள். கர்த்தர் உங்களை அறியேன் என்பார். நீங்கள் அதுவரை செய்த ஊழியம் கேள்விக்குறியாகவும், கேலிக்குரியதாகவும் மாறிவிடும். நீங்கள் உங்கள் ஊழியத்தை நிறைவேற்ற உங்களுக்கு உதவும் ஐந்து அம்சத்தை உங்களுக்கு இந்த அதிகாரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

### A. உங்களுக்கு நியமித்த இடத்திலிருங்கள்

ஆபிரகாமைக் கர்த்தர் பலியிட சொன்ன போது மோரியா தேசத்திலுள்ள மலையில் பலியிடு என்று சொல்லாமல் 'மோரியா தேசத்திற்குப்போய் அங்கே **நான் உனக்குக் குறிக்கும் மலைகளில் ஒன்றின் மேல்** அவனைத் தகனபலியாக இடு' என்றார் (ஆதி 22:2).

ஆபிரகாம் அந்த வார்த்தையின்படி செய்ததால் அங்கே அவன் மகனை இழக்காமல் திரும்பப் பெற்றான்.

அவனுக்கு அங்கு ஆடு ஆயத்தமாய் இருந்தது.

அன்பு ஊழியரே! மோரியாவின் மற்ற குன்றின் மீது ஆபிரகாம் பலிசெலுத்தியிருந்தால் அங்கு நிச்சயம் ஆடு கிடைத்திருக்காது. ஒருவேளை, 'என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து வந்தானே' என்று ஈசாக்கைத் திரும்பப் பெற தேவன் உதவி செய்திருக்கலாம். ஆனால் ஆபிரகாம் பலி செலுத்தியிருக்க முடியாது.

நீங்கள் கர்த்தர் காண்பித்த – போகச் சொன்ன இடத்தில் ஊழியம் செய்தால் உங்கள் குடும்பம் பிழைக்கும். ஆடுகளும் கிடைக்கும். கர்த்தர் சொன்ன இடத்தில்தான் ஆத்துமாக்கள் உண்டு. உங்களுக்கு விருப்பமான இடத்தில் ஊழியத்தை ஆரம்பித்து நடத்தினால் ஏதோ எனக்கு ஊழியம் செய்ய வந்து விட்டானே என்று கர்த்தர் தேவைகளைத் தந்து போஷிப்பாரே தவிர நிச்சயம் ஆத்துமாக்கள் கிடைக்காது.

அன்பான போதகரே! பல ஆண்டுகள் ஊழியம் செய்தும் ஆத்துமாக்கள் கிடைக்கவில்லையா மீண்டும் தேவ சமூகத்தில் அமர்ந்து, உங்கள் ஊழியம் எது? எங்கே? என்று கேட்டறிந்து உங்கள் ஊழியத்தைத் தொடருங்கள். உண்மையில் ஒரு பெரிய மாற்றத்தைக் காண்பீர்கள்.

இரா முழுவதும் வலையைப் போட்டு ஏமாந்த பேதுருவைப் பார்த்து வலப்பக்கமாக உன் வலையைப் போடு என்று இயேசு சொன்ன போது, அவர் வார்த்தைப்படியே அவன் வலையைப் போட்டான். அப்பொழுது திரளான மீன்கள் வலையில் சிக்கியது. இயேசு சொன்ன இடத்தில் வலையைப் போட்டால் – சபையைக் கட்டினால் ஆத்துமாக்கள் தானாய் – திரளாய் வந்து குவியும். அல்லாவிட்டால் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டும் அலசிக் கொண்டும் காலத்தைத் தள்ள வேண்டிய நிலை தான் இருக்கும்.

கர்த்தர் சொல்லாத இடத்தில் தற்போது ஊழியம் செய்து தவித்துக்கொண்டிருந்தாலோ அல்லது வசதியாக இருந்தாலோ அதைக்குறித்துக் கவலைப்பட வேண்டாம்.



மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று திகைக்க வேண்டாம். தேவ சமூகத்தில் உங்கள் ஊழிய இடம் எது என்று கண்டு கர்த்தர் காண்பிக்கும் சரியான இடத்திற்கு தைரியமாய்ப் போங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பார். ஊழியத்தைக் கட்டி எழுப்புவார்.

உங்கள் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமானால் முதற்கண் கர்த்தர் சொன்ன இடத்தில் நீங்கள் ஊழியத்தைக் கட்ட வேண்டும். அடுத்தது கர்த்தர் தந்த மந்தையோடு நீங்கள் தங்கி அவர்களைப் போஷித்து பெலப்படுத்தி காப்பாற்ற வேண்டும்.

**B. உங்களுக்குக் கொடுத்த மந்தையோடு இருங்கள்**

உன் ஊழியத்தை நிறைவேற்று என்று சொல்லியிருக்கிறாரே தவிர ஊரான் ஊழியத்தை நிறைவேற்று என்று அல்ல. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற பழமொழி பேசி ஏமாந்து போய் விடாதீர்கள். உலக வழக்கங்களைக் கடைபிடித்தால் ஊழியத்தில் வழுக்கல்கள் தான் ஏற்படும்.

ஒரு சில ஊழியர்கள் தங்களது சொந்த மந்தையை மேய்ப்பதை விட்டு விட்டு மற்ற சபைகளை மேய்க்கச் சென்று விடுகின்றனர். மாதத்தில் பாதிப்பகுதியை வெளியூர் கூட்டங்களுக்குச் செல்வதிலேயே செலவழித்து விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களின் சபை வளராது. சவலப்பிள்ளையாக வளர்ச்சி குன்றி பரிதாபமாக இருக்கும்.

ஒரு மேய்ப்பன் தனது சபையை விட்டு ஞாயிறு காலை ஆராதனையின்போது வெளியே இருக்கக் கூடாது. 99% சபையோடு தான் ஆராதிக்க வேண்டும். அதுதான் தேவ சித்தம் தேவ திட்டமும் கூட.

மேய்ப்பர்கள் இராக் காலங்களில் தங்கள் மந்தையைக் காத்தனர். அப்போது தேவ தூதன் தோன்றி இயேசுவின் பிறப்பை அறிவித்தான். அவர்கள் இயேசுவை சென்று பார்த்தார்கள் என்று வேதம் கூறுகிறது.

எந்த மேய்ப்பன் தனது மந்தையைக் காத்துக்

கொண்டிருக்கிறானோ அவனுக்கே தேவ இரகசியம் வெளிப்படுத்தப் படுகிறது. அப்படிப்பட்டவர்களே தேவனைத் தரிசிப்பார்கள். நீங்கள் உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

கர்த்தர் எந்த மந்தைக்குக் கண்காணியாக வைத்துள்ளாரோ அவர்களைக் கருத்தாய் மேய்த்துக் காப்பாற்றுங்கள்.

உங்களுக்கும் சபைக்கும் இடையில் பிளவை எப்படி உண்டாக்கி உறவைக் கெடுக்க வேண்டும் என்று சாத்தானுக்குத் தெரியும். ஊழியர்களாகிய நாம் தேவன் பக்கத்தில் நின்று கொண்டே – பக்தி வைராக்கியம் பார்த்துக்கொண்டே தப்பையும் செய்து விடுகிறோம். இது ஒரு பெரிய வேடிக்கை.

கன்மலையைப்பார்த்துப் பேசு என்றால் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள மோசே கன்மலையை அடித்துத்தவறு செய்துவிட்டான். மாபெரும் ஜெயத்தை தேவன் கட்டளையிட்ட பின்னரும் தேவனின் இருதயத்துக்கு ஏற்ற தாவீது ஜனங்களின் தொகையைக் கணக்கிட்டு தவறு செய்து விட்டான். கற்பாறை என்று பேர் பெற்றவனும், பிதாவின் வெளிப்பாடு பெற்றவன் என்று சாட்சி பெற்றவனும், எவன் மறுத்தலித்தாலும் நான் மறுத்தலிக்க மாட்டேன் என்றவனுமாகிய பேதுரு மறுதலித்து, சபித்து, சத்தியம் செய்து தவறு செய்துவிட்டான்.

நான் திடீரென இவைகளை எழுதக் காரணம் நாம் அநேக விஷயங்களில் தவறுகிறோம் என்ற யாக்கோபு 3:2ன் படி **பல போதகர்கள் தேவனோடு உறவாடிக் கொண்டே தவறுகளைச் செய்துவிடுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டவே.**

ஒருபோதகர் தனது சொந்த மந்தையை ஞாயிறு காலை ஆராதனையில் மேய்க்காமல் வேறொரு மந்தையை மேய்க்கச் சென்று விடுவாரானால் நிச்சயம் அவர் தனது சபையை வஞ்சிக்கிறார் என்று அர்த்தம். அவர் தவறு செய்துவிட்டார் என்பது உண்மை.



தவிர்க்க முடியாத அல்லது எப்போதாகிலும் ஓர் நாள் வெளியே இருப்பதில் தவறில்லை. ஆனால் ‘நான் ஒரு கன்வென்ஷன் பிரசங்கி’ என்று சொல்லிக்கொண்டு அடிக்கடி வெளியே போய்விடுகிற ஊழியரே! உங்கள் வெளியூர் கூட்டத்திற்காக சபையை பலியாக்க வேண்டாம். பொறுப்புள்ள போதகர் கையில் உங்கள் சபையை ஒப்புக் கொடுத்துவிட்டு 52 வாரமும் வெளியே இருங்கள். யாருக்கும் பிரச்சனையில்லை.

ஒரு போதகர் தவறிவிடுகிற மிக எளிதான காரியம் அவர் தனது சபையை விட்டு வெளியே செல்வதே. ‘All the callings from the outside is not from the Lord’ (வெளியிலிருந்து வரும் கூட்ட அழைப்புகளெல்லாம் கர்த்தரால் வந்தது அல்ல) என்று மதிப்பிற்குரிய பாஸ்டர் சுந்தரம் அவர்கள் சொல்லுவார்கள். அது அனுபவப்பூர்வமான உண்மை.

எனது பிள்ளைகள் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது வீட்டின் சாப்பாட்டு மேஜையின் மேல் எவ்வளவு சிறப்பான தின்பண்டம் இருந்தாலும் அவர்கள் அதன் மேல் கவனத்தை வைப்பதில்லை. நேரே உள்ளே வந்து அம்மா இருக்கிறார்களா என்று பார்ப்பார்கள். அம்மா இருந்தால் அவர்கள் முகம் மலரும். மேஜையின் மேல் உள்ளவைகள் மறையும். அம்மா இல்லாவிட்டால் அவர்கள் முகம் வாடி வதங்கி விடும். என்னிடம் அம்மா எங்கே என்று கேட்டு விசாரணை நடைபெறும். அம்மா வரும்வரை வாசலிலேயே உட்கார்ந்திருப்பார்கள்.

அப்படித்தான் நமது சபை விசுவாசிகளும் அவர்கள் சபைக்குள் வரும்போதே பாஸ்டர் இருக்கிறாரா என்று பார்த்துக்கொண்டே வருவார்கள். நமது முகத்தைப் பார்த்துவிட்டால் முகம் மலர்ந்து விடுதலையோடு ஆராதிப்பார்கள். நாம் அங்கே இல்லாவிட்டால் சோர்ந்து வாடி வதங்கி விடுவார்கள்.

அவர்கள் நம்பிக்கை மனுஷன் மேல் இருக்கிறதா? என்று கேட்டு விடாதீர்கள். அவர்கள் நம்மை தேவனின் ஸ்தானாதிபதிகளாய், அவர்களை அன்புடன் விசாரிக்கும்

தேவதூதர்களாய் நம்மை நினைக்கிறார்கள். நீங்கள் அடிக்கடி வெளியே சென்றால் அவர்களும் 'நம்ம போதகர் இன்று இருக்க மாட்டார்' என்று தங்கள் வீடுகளில் அமர்ந்து விடுவார்கள். பலவீனமான அவர்களின் விசுவாச இடறல்களுக்கு நீங்களே காரணமாகி விடாதீர்கள்.

**C. உங்களுக்கு அருளப்பட்ட மந்தையை போஷியுங்கள்**

ஒரு மேய்ப்பனுக்குரிய பிரதான ஊழியம் தனது ஆடுகளுக்கு நல்ல ஆகாரத்தைக் கொடுப்பதே. சபைக்குக் கொடுக்கப்பட்ட ஐந்து வித ஊழியத்தில் மேய்ப்பர் ஊழியமும் போதக ஊழியமும் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சங்கீதம் 23–இல் ஒரு மேய்ப்பனைக் குறித்த சிறப்புக் காரியத்தைக் காண்கிறோம். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்து தண்ணீர்கள் அண்டையில் என்னை நடத்துகிறார்' என்ற வார்த்தையிலிருந்து நல்ல மேய்ப்பன் தனது ஆடுகளை புல்லும் தண்ணீரும் உள்ள இடத்தில் நடத்துகிறான் என்று புரிகிறதல்லவா?

உங்கள் சபை மக்களுக்கு வேத வசனத்திலிருந்து கொழுப்பான ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமை. அவர்கள் ஆவிக்குரிய பசிக்கேற்ப – ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ப சூடான – சுவையான வேத வசனத்தை பகிர்ந்தளிக்க வேண்டும்.

உங்கள் பிரசங்கம் உங்கள் சபை மக்களின் ஆத்தும பசியையும் தாகத்தையும் தீர்க்கும் வண்ணம் இல்லாவிட்டால் உங்களை விட்டு அவர்களுக்கு ஆகாரம் கிடைக்கும் இடம் நோக்கி நகர்ந்து விடுவார்கள். உங்கள் செய்திகள் கொழுப்பான பதார்த்தமாய் இருக்குமாயின் எந்த நிலையிலும் உங்கள் சபையை விட்டு ஆத்துமாக்கள் போகாது.

ஊழியர்கள் செய்தியோடு சபையை சந்திப்பதற்கு முன்பு செய்திக்காகத் தேவனை முதலில் சந்திக்க வேண்டும். ஆவியானவர் ஆழங்களை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். எனவே அவரின் சமூகத்தில் அமர்ந்து கேட்டு வாங்கி



ஆயத்தமாக்கின செய்திகள் விசுவாசிகளை உயிர்ப்பிக்கும்.

வாரத்தில் ஆறுநாட்கள் உழைத்து, களைத்து, இளைத்து வரும் ஆத்துமாக்களை வேத வார்த்தைகளால் பலப்படுத்தி திடப்படுத்தி ஸ்திரப்படுத்தி அனுப்பவேண்டியது ஊழியர்களின் கடமை. அந்த ஊழியத்தை சகல கவனத்தோடு செய்ய வேண்டியது அவசியம். எப்படியோ ஒரு பிரசங்கம் செய்ய வேண்டும் என்று பத்திரிக்கைகளையும், ஒத்த வாக்கிய அகராதியையும் ஒத்தாசையாக வைத்துக்கொண்டு செய்தியளிக்கக் கூடாது. அப்படி செய்யும் பட்சத்தில் உங்கள் சபை சரிந்து போகும் மறந்து விடாதீர்கள்.

ஒரு ஊழியர் கூட்டத்தின்போது ஒரு போதகர் கேட்டார் 'ஆடு திருடலாமா?' தலைமைப் போதகருக்கு விஷயம் புரிந்து விட்டது. விபரீதம் வரும் முன்னே 'ஒருவன் தன் ஆடுகளை சரியாக வளர்த்தால், பாதுகாத்தால், போஷித்தால் திருடு போகாது' என்று கூறி அமர்த்தி விட்டார்.

ஆம் திருப்தியடைந்தவன் தேன் கூட்டையும் மிதிப்பான் என்றல்லவா வேதம் சொல்கிறது. நாம் நல்ல தெளிவுள்ள செய்திகளைக் கொடுத்து நமது ஆத்துமாக்களை திருப்தியாக வைத்திருந்தால் யார் திருடிக்கொண்டு போனாலும் அது இரண்டே வாரத்தில் ஓடி வந்துவிடும். இது அனுபவத்தில் கண்ட உண்மை.

கர்த்தரின் ஊழியக்காரனான மந்தையின் மேய்ப்பன் சனிக்கிழமைகளில் சொந்த அலுவல்களைக் கவனிக்கக் கூடாது. ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் தனது நேரத்தைச் செலவிட வேண்டும். சிறிதும் பெரிதுமான ஆயிரத்துக்கு மேற்பட்ட செய்திகளை இதுவரை நான் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் ஞாயிறு காலையில் எனது சபையில் செய்தி கொடுப்பது என்றால் அதற்கு முந்தின நாள் துவக்கி ஆராதனை செய்து முடியும் வரை எனது இருதயத் துடிப்பே மாறியிருக்கும். கண்கள் ஒருவிதமாக சிவந்து விடும். அத்தனை பயபக்தியாக தேவனிடமிருந்து தேவ செய்தியை

வாங்கி என் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறேன்.

ஒவ்வொரு ஆராதனையின் முடிவிலும் ஒரு இன்பமான காரியம் எனக்கு ஏற்படுவது வாடிக்கை. யாராகிலும் ஒரு விசுவாசி கண்டிப்பாக என்னிடம் வருவார்கள், ‘அய்யா நான் எதை நினைத்துக்கொண்டு வந்தேனோ அதைக் குறித்தே கர்த்தர் இன்று பேசினார்’ ‘அய்யா இன்று காலை ஜெபிக்கும் போது ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து கர்த்தர் ஒரு பாரத்தைக் கொடுத்தார். அதே காரியத்தைக் குறித்து நீங்கள் இப்பொழுது பேசினீர்கள் என்று பல சாட்சிகளைச் சொல்வார்கள். எனவே என் மக்களுக்கு நான் அளிக்கும் செய்திகள் ஆயத்தமாக்கப் பட்டவைகளல்ல **அனுப்பப்பட்டவைகள்** என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

நமது மந்தைக்கு வாரத்தில் ஒருநாள் தான் முழுமையான சத்துணவை ஞாயிறு ஆராதனையில் அளிக்கிறோம். அதை அசதியாய் செய்வது மாத்திரமல்ல. அடுத்தவரை வைத்து செய்வதும் தவறு. அநேக சபைகள் வளரமுடியாமற் போனதற்குக் காரணம் போதகர் நல்ல சுகபெலத்துடன் இருந்து கொண்டே சில விருந்தாளிகளை அழைத்து சபையில் பிரசங்கிக்க வைத்ததே.

வெளியிலிருந்து பிரசங்கிமார்கள் நமது சபைக்கு வந்து செய்தி கொடுப்பது தவறல்ல. நானும் கூட மற்ற சபைகளில் செய்தியளிக்கிறேன். எனது சபையிலும் மற்றவர்கள் வந்து செய்தியளிக்கிறார்கள். ஆவியானவர் ஒருவரே எல்லோரையும் கொண்டு அவரால் பேச முடியும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். மறுப்பு இல்லை.

ஆனால் வெளிப் பிரசங்கிமார்கள் வந்து நமது சபையில் **அடிக்கடி பிரசங்கிப்பது** அவ்வளவு சரியில்லை. தேவ சித்தமுமில்லை. வெளிப் பிரசங்கிகளை வைத்து உங்கள் மந்தையை போஷிப்பது ஓட்டல் சாப்பாடு வாங்கி படைப்பது போன்றது. எவ்வளவு நாளைக்கு ஓட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளும்? எவ்வளவு வளர்ச்சியை சபைக்கு பெற்றுத் தர முடியும்? சற்று சிந்தித்துப் பாருங்கள்.



**உங்கள் சபைக்கு முறையாகத் தூது கொடுப்பதை நீங்கள் நிறுத்தும் அன்றே உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி நின்று விடுகிறது.** எந்த மேய்ப்பன் வாரத்தோறும் புது செய்தியைத் தனது சபைக்குக் கொடுக்கிறாரோ அவரது சபை முறையாக வளர்வது மாத்திரமல்ல. இவரும் சீராக வளருகிறார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

தான் வளராத பட்சத்தில் எந்த ஊழியக்காரரும் தனது சபையை வளர்ச்சியடையச் செய்ய முடியாது. அந்நிலை ஏற்படுமாயின் நீங்கள் உங்கள் சபைப் பொறுப்பிலிருந்து சீக்கிரம் பிடுங்கப் படுவீர்கள். சவுலைக் கர்த்தர் இராஜாவாகத் தெரிந்தெடுத்த போது சமஸ்த இஸ்ரவேலரும் அவனது தோளின் கீழிருந்தார்கள். அவன் அந்த அளவு உயரமாயிருந்தான் (1 சாமு 10 : 23, 24) இதைப் போலவே மேய்ப்பனின் வளர்ச்சி எல்லா விசுவாசிகளை விட உயர்வாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் விசுவாசிகள் உங்களை மேய்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

**D. உங்களுக்கு அளிக்கப்பட்ட கிருபையில் நில்லுங்கள்**

கர்த்தர் பட்சபாதமுள்ளவரல்ல. ஆனால் அவர் தமது கிருபையை வெவ்வேறு அளவில் மனிதர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார். நம்மைக் கொண்டு இப்படித்தான் ஊழியத்தைக் கட்ட வேண்டுமென்று கர்த்தர் தீர்மானித்திருக்கும் போது உங்களுக்கு அருளப்பட்ட கிருபையின் அளவை உணர்ந்து ஸ்தோத்திரத்தோடே உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

‘புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டது போல’ கான மயிலாட கண்டிருந்த வான்கோழி, தானும் அதுவாகப் பாவித்து தனது பொல்லா சிறகை விரித்தாடினாற் போல்’ போன்ற சொல் வழக்குகள் ஏராளம் நம்மிடத்தில் உண்டு இந்த வார்த்தைகளை ஒட்டு மொத்தமாகத் தள்ளி விடாமல் ஆவிக்குரியவர்கள் சிந்தித்து விடுவது நல்லது.

எக்காரணத்தை முன்னிட்டும் மற்ற ஊழியத்தைப் போல் அல்லது அவர்கள் பெற்றிருக்கும் வசதிகளைப் போல் நமக்கு வேண்டும் என்ற எண்ணம் கொள்ள வேண்டாம். அப்படிப்பட்ட எண்ணம் கொண்டு அவைகளை அடைய குறுக்கு வழிகளைத் தேடவும் வேண்டாம். தேவன் உங்கள் மேல் பிரியமாய் இருக்கமாட்டார். உங்கள் ஊழியம் வளருவதற்குப் பதில் தளரும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சில ஊழியர்கள் அழகான கார், வீடு, வைத்திருக்கலாம் நானும் ஊழியர்தானே எனக்கும் இவைகள் அவசியம் என்று நீங்கள் சொல்வது நல்லதுதான். கர்த்தர் கொடுத்தால் அந்தக் கிருபைக்காக ஸ்தோத்திரம் சொல்லுங்கள். அல்லாத பட்சத்தில் வாங்கியே தீருவேன் என்று முடிவெடுத்து வங்கிக் கடனில் வாங்கி கடனும் கட்ட முடியாமல் வீட்டிலும் இருக்க முடியாமல் கலங்கிக் கேலிக்குரியவராக மாறி விடாதீர்கள். இருப்பதைக் கொண்டு உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

நமது ஊழியம் பெருகும் வேளையில் நமக்கு உதவி ஊழியர்கள் மிகவும் அவசியமே. ஆதாமைத் தோட்டத்தைப் பண்படுத்தச் சொன்னபோது அவனுக்கு ஏற்ற துணையைக் கொடுத்தது போல் தேவனுடைய தோட்டத்தைப் பண்படுத்துகிற இந்தப் பணிக்கு நமக்கு ஏற்ற துணைகளை தேவன் நமக்கு வழங்குவார்.

நாலு ஊழியர் நமக்குக் கீழ் இருக்க வேண்டும். நமது ஊழியம் நாலா திசையில் பெருக வேண்டும். நான் மதிக்கத்தக்க ஊழியராகத் திகழ வேண்டுமென்று மாம்சத்தில் திட்டமிடாதீர்கள். இப்படி நொந்து கெட்டவர்கள் அநேகம் பேரை நான் பார்த்திருக்கிறேன்.

சென்னையிலே ஒரு மூத்த தலைமைப் போதகர் இருந்தார். அவர் உயிரோடிருந்த நாட்களில் அவருக்கு உடன் ஊழியராக, தற்போது தலைமைப் போதகராக இருக்கும் போதகர் ஒருவர் இருந்தார். இந்த உதவிப் போதகர் மிகுந்த பணிவுடன், இசைவுடன், சகல கீழ்ப்படிதலுடன் தனது



தலைமைப் போதகருக்கு அடங்கி இருந்தார். ஊழியம் மிகுந்த ஆசீர்வாதமாக நடந்து வந்தது.

இவர்கள் இருவரின் துணைவியார்களும் உடன் பிறந்தவர்களாய் இருந்தபடியால் இரு போதகர்களுக்கு மாம்சப் பிரகாரமான உறவு இருந்தது. ஆனால் அவர்கள் அந்த இணைப்பில் ஐக்கியப்படாமல் கர்த்தர் கொடுத்த அழைப்பின் படியும் அனுமதியின் படியும் இசைந்து ஊழியம் செய்து வந்தார்கள்.

இதனைக் கண்ட ஒரு போதகர் தனது ஊழியத்தின் எதிர்காலத்தை யோசித்தார். தானும் அந்த மூத்த தலைமைப் போதகர் அய்யாவைப் போல் தனது மனைவியின் தங்கைக் கணவரை உடன் ஊழியராக வைத்துக் கொண்டால் தனது ஊழியத்திற்குப் பெரிய உதவியும் பாதுகாப்பும் கிட்டும் என்று நினைத்தார். தனது மனைவியின் தங்கையின் கணவரை அணுகி அவருக்கு ஊழிய அழைப்பு இருப்பதாக இவரே அடிக்கடி அடித்துச் சொன்னார்.

அடிக்கடி அடிக்க அம்மியும் நகருமல்லவா, வியாதி மற்றும் பல பிரச்சனைகள் மத்தியிலிருந்த அவரும் ஒரு வேளை நமக்கு ஊழிய அழைப்பு இருக்குமோ என்று எண்ணி உடனே வேலையை விட்டு விட்டு ஊழியத்திற்கு வந்து விட்டார். குடும்ப உறவின் ஐக்கியத்தில் மலர்ந்த இந்த ஊழியம் சில மாதங்கள் குதுாகலமாக இருந்தது.

சிறிது காலத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றம். பெரியவர்கள் என்னை ஏமாற்றி ஊழியத்திற்கு அழைத்துக் கெடுத்து விட்டார்கள் என்று சின்னவர் புலம்பினார். சின்னவரின் உறவு முறையானவர்கள் பெரியவரைத் தட்டிக் கேட்க நேரிலேயே வந்து விட்டார்கள். அது ஒரு ஞாயிறு ஆராதனை வேளை, சாட்சி நேரத்தில் சாட்சி கெடும் அளவிற்கு சபைக்குள்ளே குழப்பம் 'டேய் டோய்' என்ற கூக்குரல்கள். சபையில் எதிர்பாரத வேளையில் ஏற்பட்ட இந்நிகழ்ச்சியால் பெண்களின் விசும்பல்கள் ஒரு பூகம்பமே வெடித்தது போன்றிருந்தது.

தனது முன் யோசனையில்லாத செயலுக்காகப் பெரியவர் வடித்த கண்ணீருக்கு அளவே இல்லை.

மனமுடைந்து உருக்குலைந்து போனார்.

'குயவனின் கையிலே களிமண்ணைப் போலவே
என்னை உம் கையிலே வைத்திட்டேன் நாயகா
என் சொந்த இஷ்டமோ ஏதும் வேண்டாம் நாதா
உம் நோக்கம் என்னிலே பூரணமாகட்டும்'

என்று பிராண நாதனை நோக்கிப் புலம்பல் பாடிக் கொண்டிருந்தார்.

சின்னவர் தான் விட்ட வேலைக்கே திரும்பிப் போய் விட்டார். பெரியவரோ, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று தேற்றிக் கெண்டார். தன் பிழையை உணர்ந்த அவரைக் கர்த்தர் ஆசீர்வதித்து இன்று தமிழகத்தில் முன்னோடிப் போதகராக வைத்துள்ளார்.

உங்களுக்கு உதவி ஊழியர் தேவை என்றால் ஜெபியுங்கள். யோசியுங்கள் தேவ சமூகத்தில் தீர்மானியுங்கள். பின்னர் தெரிவு செய்யுங்கள். மாம்ச மற்றும் உலகப் பிரகாரமான அளவு கோல்களைப் பயன்படுத்தினால் சபை உடைந்து போகும் கவனமாயிருங்கள். மகனை, மைத்துனரை பலவந்தமாக ஊழியத்தில் நுழைக்க மாம்சத்தில் தீர்மானிக்காதீர்கள்.

உங்கள் தரிசனத்தின் பிரதிபலிப்பைத் தங்கள் உள்ளத்தில் பெறாத எந்த நபரும் உங்களோடு ஆவியில் இசைந்து செயல்பட முடியாது. உங்களுடன் இசைந்து செயல்படாத நபரால் உங்கள் ஊழியம் எள்ளளவும் வளராது. இந்தக் கூலியாட்கள் திடீரென உங்களை விட்டு ஓடிப்போவார்கள்.

உங்கள் ஊழியத்தை நீங்களே நிறைவேற்றுங்கள். உங்கள் பலத்துக்கு உட்பட்ட எல்லை வரை ஊழியம் செய்யுங்கள். அகல கால் வைத்து அலசடிப்படாதீர்கள். பின்னர் வேதனையோ வேதனை என்று புலம்பாதீர்கள்.

**E.உங்களுக்கு அவசியமான அலுவல்களை மட்டும் செய்யுங்கள்.**

கர்த்தருடைய ஊழியராகிய நாம் சகலத்திலும் ஞானமாக நடந்து கொள்ள வேண்டும். நமது பிரதான வேலை தேவனுடைய மந்தையைக் காப்பது தேவனுடைய வீட்டார் யாவருக்கும் உதவி செய்ய வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம் என்பது உண்மைதான்.



நமது சபை மக்களுக்கு ஆவிக்குரிய வகையில் மாத்திரமல்ல. சரீரப்படியான உதவிகளைச் செய்யவும் நமக்குக் கடமை உண்டு ஆனால் அவைகளை வாரித்தலையில் போட்டு கொண்டு அலையக் கூடாது. அநேக ஊழியர்கள் விசுவாசிகளுக்கு லோன் வாங்க கலெக்டர் அலுவலகப் படிகளில் ஏறி இறங்கியே இளைத்துப் போய் விட்டார்கள். இதை ஊழியர்கள் முதற்கண் தவிர்த்து விடுதல் அவசியம். அதனால் உங்கள் ஆவிக்குரிய நிலை ஒருபடி இறங்கிவிடும் என்பது உண்மை.

ஒரு விசுவாச குடும்பத்திற்கு ஏதாகிலும் வெளி அலுவலகத்தில் வேலை இருக்குமாயின் நமது சபையிலுள்ள விவரம் தெரிந்த விசுவாசியுடன் அவர்களை இணைத்து அக்காரியத்திற்கு உதவிட வேண்டுமே தவிர நீங்கள் தெருத் தெருவாய் அலையக் கூடாது இது உங்களுக்கு ஆகாத வழக்கு.

ஆகாத வழக்கில் தலையிடுகிறவன் தெருவில் போகும் நாயைக் காதைப் பிடித்து இழுத்து கடி வாங்குகிறவனாவான் இப்படிச் சில ஊழியர்கள் கடி வாங்கிக் கஷ்டப்படுவதை பார்க்கும் போது எனக்குக் கஷ்டமாய் இருக்கிறது. குறிப்பாக பெண்களை அழைத்துக் கொண்டு வெளி அலுவல்களுக்கு செல்வது தவிர்க்கப் படவேண்டும். நீங்கள் உடன் போனால் தான் காரியம் ஆகும் என்கிற கண்டிப்பான நிலைமை ஏற்படுமாயின் தவிர்க்க முடியாத பட்சத்தில் உங்கள் மனைவியை உடன் அழைத்துச் செல்ல வேண்டும். இப்படித் தனியாகச் சென்று வீடு திரும்பாத பல ஊழியர்கள் தமிழகத்தில் உண்டு கவனமாயிருங்கள். நட்சத்திரங்களே! உங்களுக்குப் பக்கத்தில் வலுசர்ப்பம் வாலை சுழற்றிக் கொண்டிருக்கிறான். மார்க்கம் தப்பினால் விழுவது நிச்சயம். புத்திமதியை ஏற்றுக் கர்த்தரின் கரத்திலிருந்தால் எல்லா சூழ்நிலையிலும் காக்கப்படுவது அதிக நிச்சயம்.

# 5

# நீயோ தேவனுடைய மனுஷனே !

தேவனுடைய சபையைக் கட்டி எழுப்பும் பணியை கரிசனையோடு செய்து வரும் உங்களை மனப்பூர்வமாய் வாழ்த்துகிறேன். உங்களில் ஒன்றைத் துவக்கியவர் உங்களைக் கொண்டு மகிமையாய் அக்காரியத்தை செய்து முடிப்பார் என்று கர்த்தருக்குள் நிச்சயித்திருக்கிறேன். கடந்து வந்த அத்தியாயங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களில் பல உங்களைத் தேற்றியிருக்கும். சில உங்களை மாற்றியிருக்கும். சில கருத்துக்கள் உள்ளத்தைக் குத்தியிருக்கும் சில கருத்துக்கள் ஜீவியத்தை சுத்திகரித்திருக்கும் என்று நம்புகிறேன்.

நான் கடந்த அத்தியாயங்களில் எழுதியவைகளெல்லாம் அதிக பட்சம் வேதாகம வசனங்களே. மற்றவைகள் என் சமகாலத்துப் பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் நடைபெற்றவைகள் சிலருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் பாதை காட்டும் பச்சை விளக்குகளாய் இருந்ததுண்டு. சிலருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் பாதை மாறிப் போகாதே என்று எச்சரிக்கும் சிவப்பு விளக்காய் இருந்து என்னை சிந்திக்க வைத்தவைகள்.

இவைகளை யாரையோ இனங்காட்டி விட வேண்டும் என்றோ, குற்றப்படுத்த வேண்டும் என்றோ நான் எழுதாமல் நடக்க வேண்டிய வழிகளில் சர்வ ஜாக்கிரதையோடு நீங்கள் நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மிகுந்த ஜெபத்தோடு பக்தி வைராக்கியத்தோடு கூடுதலாக சொல்ல வேண்டுமானால் தேவனுடைய தோட்டத்தில் பணிபுரிகின்ற என்னைப் போன்ற ஊழியர்கள் உயர வேண்டும் என்ற தனியாத தாகத்தோடு இஃதினை எழுதுகிறேன்.



திறந்த மனதோடு ஒரு இரகசியத்தை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தை நான் எழுதுவதற்கு முன்பாக என்னைத் தகுதியுள்ளவனாக்கும்படிக்கே இதில் எழுதப்பட்டுள்ள அநேகக் காரியங்களினூடே கர்த்தர் என்னை நடத்தி வந்தார். நிந்தனை என்னும் காட்டாறுகள், சோதனை என்னும் அக்கினி சூளைகள், காரணமில்லாமல் தூஷிக்கும் சீமேயிகள், எனக்கு அறியாமலே பள்ளம் வெட்டின யூதாஸ்கள் இப்படிப் பல்வேறு சுழல்காற்றுகளில் சுக்கு நூறாக உடைய வேண்டிய நான் எலியா சுழல்காற்றில் ஏறி வந்து விட்டது போல தப்பித்து வந்ததினால் தற்பரனைத் துதித்து, நீங்கள் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவைகளைத் தொகுத்து எழுதியிருக்கிறேன்.

பரிசுத்த ஆவியானவர் என்னை வலக்கரத்தால் அணைத்து இடக்கரத்தால் தேற்றி தனது நேசத்தால் சோகமடையச் செய்த நாட்கள் பல உண்டு. ஒவ்வொரு முறையும் வேத வசனத்தை வாசிக்கும் பொழுதெல்லாம் கர்த்தருடைய வார்த்தைகள் என் மனப்புண்ணுக்கு மருந்தாய், கண்ணுக்குக் கலிக்கமாய் இருந்து என்னைத் தெளிவுள்ள பாதையில் துணிவோடு நடக்கச் செய்ததுண்டு.

இவைகளுக்கு மேலே மற்றொரு காரியத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். அது கர்த்தர் எனக்குத் தந்த பரிசுத்தவான்களின் ஐக்கியம். என்னுடைய ஒவ்வொரு இக்கட்டான சூழ்நிலையிலும் பரிசுத்தவான்கள் தாங்கள் கடந்து வந்த தங்கள் அனுபவங்களைச் சொல்லி என்னைத் தேற்றியிருக்கிறார்கள். அவர்கள் கடந்து வந்த பாதைகளையெல்லாம் கேட்ட பொழுது நான் பட்டவைகள் ஒன்றுமில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஒன்றை நான் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு ஊழியனுடைய ஊழியப்பாதையில் கர்த்தரால் வருகிற சோதனையுண்டு. சத்துரு நம்மை மாய்க்க அனுப்புகிற சோதனை உண்டு. அவனது சொந்த மாம்சமே அவனுக்கு சோதனையாவதுண்டு. இவைகள் யாவையிலும் தெளிந்த

புத்தியோடு கர்த்தரை ஒரு ஊழியன் சார்ந்து கொள்வானானால் அவன் ஆபிரகாமைப் போல தேவ சோதனைக்குப் பின்பு மகனையும் ஆட்டுக்குட்டியையும் பெற்றுக் கொள்கிறான்.

யோபுவைப் போல சாத்தானின் சோதனையில் ஜெயம் பெற்று இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பங்காகப் பெறுகிறான். யோசேப்பைப் போல மாம்ச சோதனையில் வெற்றி பெற்று மாபெரும் அதிபதியாக உயர்த்தப்படுகிறான்.

இந்தப் புத்தகத்தை முடிக்கும் தருவாயில் சில முக்கியக் கருத்துக்களை உங்களுக்கு முன்பாக வைக்க விரும்புகிறேன். மாதிரி மேய்ப்பனாகிய பவுல் தன்னுடைய ஆவிக்குரிய மகனான தீமோத்தேயு என்னும் போதகனுக்கு எழுதியவைகளைக் கவனித்துப் பாருங்கள். அதில் ஒரு வரியைத்தான் இந்த அத்தியாயத்திற்கு தலைப்பாக இட்டுள்ளேன்.

'நீயோ தேவனுடைய மனுஷனே' ஆம் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல் எனக்கும் மற்றவர்களைக் குறித்து தற்போது கவலையில்லை. நீங்களும் கவலைப்பட வேண்டாம். மற்றவர்களைப் பார்க்காமல் நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளில் நிலைத்திருந்தால் உன்னையும் உன் வசனத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்வாய் என்பது உண்மை.

எனக்கு அன்பான மேய்ப்பர்களே! உங்கள் மந்தை கட்டப்பட, காக்கப்பட இந்த ஐந்தாம் அத்தியாயத்தில் பத்து முக்கியக் குறிப்புகளை உங்களுக்கு முன்வைக்க விரும்புகிறேன். இவைகள் பத்துக் கட்டளைகளல்ல. இவைகள் **பத்து பயனுள்ள ஆலோசனைகள்.** இதனை நீங்கள் பயன்படுத்தினால் பலன் பெறுவீர்கள் என்பது நிச்சயம். இவைகளை அலட்சியப் படுத்தினால் பாதிக்கப்படுவீர்கள் என்பதும் நிச்சயம்.

**1. சொந்தக் குடும்பத்தைக் கவனியுங்கள்.**

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு (I தீமோத்தேயு 3:4–இல்) கண்காணியானவன் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும் என்று கூறியிருப்பது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரியம்.



பவுல் தொடர்ந்து சொல்லுகிறபடி ஒரு மேய்ப்பனானவன் தனது சொந்தக் குடும்பத்தை சரியாக நடத்தாவிட்டால் அவன் தேவனுடைய சபையையும் சரியான முறையில் நடத்த முடியாது என்று எழுதுகிறார்.

இங்கே தான் அநேக ஊழியர்கள் தவறு செய்து விடுகிறோம். கர்த்தர் நமக்குக் கொடுத்த மனைவியை அடுப்பங்கரை அரசிகளாக அபிஷேகம் பண்ணி விட்டு அவர்களை சபை ஊழியத்தில் அந்நியரைப் போல் நடத்துகிறோம். இப்படி செய்வதினால் ஊழியங்கள் நடக்குமே தவிர சபை வளராது. ஒரு திருச்சபையின் வளர்ச்சியில் சபை மேய்ப்பனுக்கு எவ்வளவு பொறுப்பும் கடமையும் இருக்கிறதோ அதற்கு சமமான பொறுப்பும் கடமையும் போதகருடைய மனைவிக்கும் உண்டு.

நான் திருமணமாகாத ஊழியர்களைக் குறித்து இங்கு குறிப்பிடவில்லை. திருமணமாகி குடும்பத்தோடிக்கிற ஊழியர்களே உங்களுக்குத்தான் சொல்கிறேன். உங்கள் மனைவியரை நீங்கள் கனப்படுத்தி உங்கள் ஊழியத்தில் பயன்படுத்த தவறுவீர்களாகில் நிச்சயம் நீங்கள் தவறான திசைக்கு நேராக நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பது உண்மை.

என்னுடைய அனுபவத்தில் பல ஊழியர்களை நேரடியாகவும், சில ஊழியர்களை அவர்களுடைய புத்தகங்கள் மூலமாகவும் அறிந்திருக்கிறேன். அவர்கள் ஊழியத்தின் உயர்ந்த நிலைக்கு ஏறி வருவதற்கு அவர்கள் மனைவிகள் முக்கிய பொறுப்பு வகித்திருக்கிறார்கள் என்பது உண்மை.

உங்களுக்குக் கர்த்தர் கொடுத்த மனைவிக்கு ராகம் தாளம் சுருதி இவைகளைக் குறித்த ஞானம் இல்லாதிருக்கலாம் அல்லது வேதம் போதகம் இவைகளில்

கிருபை இல்லாமலிருக்கலாம். அதற்காக நீங்கள் இது ஒத்து வராது என்று ஓரம் கட்டி விடக்கூடாது. நாம் மாத்திரம் என்ன பிறக்கும் பொழுதே பீரங்கிப் பிரசங்கிகளாகவா பிறந்தோம்? தட்டுத் தடுமாறித்தான் பிரசங்கிக்க ஆரம்பித்தோம். ஆகவே உங்கள் மனைவியை உங்கள் ஊழியத்தில் எப்படிப் பயன்படுத்த முடியும் என்று ஆராய்ந்து அதற்கேற்ப அவர்களை உற்சாகப்படுத்தினால் உங்களுக்குப் பாதி வேலை குறைந்து விடும்.

சில ஊழியர் குடும்பங்களிலே ஓயா ஒழுக்கைப் போலப் பிரச்சனைகள். விசுவாச சகோதரிகளுக்குக் கொடுக்கப்படுகிற முக்கியத்துவத்தில் பத்தில் ஒரு பங்கு கூட சொந்த மனைவிக்குக் கொடுப்பதில்லை. அதனால் அவர் நாள்தோறும் வீட்டில் பிரச்சனையை சந்தித்து அதற்குப் பரிகாரம் தேட வெளியூர் சுற்றுலா சென்று அடுத்த பிரச்சனையை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்புகிறார். இது ஒரு தொடர்கதை.

பிரியமான மேய்ப்பர்களே! ஊழியத்தில் உங்கள் மனைவியரை பொறுப்பான இடத்தில் வைக்க நீங்கள் தவறி விட்டால் உங்கள் மனைவியே உங்களுக்கு சரியான தலைவலியாக இருப்பார் என்று எச்சரிக்க விரும்புகிறேன். அவர்களை எல்லாக் காரியத்திலேயும் உற்சாகப்படுத்துங்கள். உற்சாகமூட்டும் வார்த்தைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். பெண்களை மாத்திரம் சரியான விதத்தில் நாம் பயன்படுத்திவிட்டால் அவர்களைப் போல சிறப்பான பணியை இந்த உலகத்தில் வேறு யாராலும் செய்ய முடியாது.

சில ஊழியர் குடும்பங்களில் வேறு விதமாகப் பிரச்சனை. ஊழியம் ஊழியம் என்று ஊழியக்காரர் வெளியே சுற்றிக் கொண்டு குடும்பத்தை ஒட்டு மொத்தமாக சிலர் மறந்து விடுகிறார்கள். மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உண்டான காரியங்களை ஒழுங்காகக் கவனிப்பதில்லை. மனைவி மக்களோடு சற்று நேரம் அமர்ந்து சந்தோஷமாகப் பேசுவது இல்லை. இப்படிப்பட்டவர்கள் ஊழியம் செய்யலாமே தவிர உண்மையான மனநிறைவோடு ஊழியம் செய்ய



முடியாது.

நீங்கள் அடுத்த குடும்பங்களை வீடு சந்திப்பதற்கு முன்பாக உங்கள் வீட்டாரோடு முதலில் சந்தித்து, அவர்களோடு அமர்ந்து, பேசி முதற்கண் அவர்களை மகிழ்ச்சியாக்குங்கள். சொந்தக் குடும்பத்தை சந்தோஷமாக வைத்துக்கொள்ள முடியாத நீங்கள் எந்த அடிப்படையில் மற்ற குடும்பத்திற்கு சந்தோஷத்தைக் கொண்டு செல்லப் போகிறீர்கள். 'ஓ! சபைதான் எனக்கு முக்கியம்; குடும்பம் அடுத்தது தான்' என்ற சுலோகத்திற்கு இன்றே முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள்.

பிரியமானவர்களே! சபை வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டுமா. வரிசையை சரிப்படுத்துங்கள். கர்த்தருக்கு அடுத்த இடத்தை உங்கள் குடும்பத்திற்கு கொடுங்கள். குடும்பத்தாரை நேசியுங்கள். அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமையை ஒழுங்காய் செய்யுங்கள். ஒரு வேளை பரந்த ஊழியங்கள் இருந்தாலும் மாதத்தில் ஒரு நாள் என் குடும்பத்தாரோடு இருப்பேன் என்று கன்வென்ஷனுக்குத் தேதி கொடுப்பது போல் முதலிலேயே தேதியைக் குறித்து வைத்துவிடுங்களேன் உங்களுக்கு இலகுவாக இருக்கும்.

சபையாருக்குப் போதகர் என்ற முறையில் மிகச்சிறப்பாக கடமையாற்றுகிற நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குத் தகப்பன் என்ற பொறுப்பை நீங்கள் செவ்வனே செய்ய வேண்டாமா. மாதத்திற்கு ஒரு முறையாகிலும் முழுக்குடும்பமாய் தனித்து ஒன்றித்து இருங்களேன். அந்த சந்தோஷம் உங்களை புதிய உத்வேகத்துடன் ஊழியம் செய்ய ஊக்குவிக்கும். அந்த ஒரு நாள் உங்கள் மனைவியின் அடுப்படி வேலைகளுக்கு விடுப்புக் கொடுத்துவிட்டு சந்தோஷமாக அப்படி வெளியே சென்று சாப்பிட்டு விட்டு வாருங்களேன். என்ன குடியா மூழ்கி விடப்போகிறது. கடனா பெருகி விடப் போகிறது.

எனக்குக் கூட ஊழியத்தின் ஆரம்பத்தில் இந்த முதலாம் குறிப்பிலேயே தோல்வியிருக்கத்தான் செய்தது. என் வேகத்திற்கு என் மனைவி வர வேண்டும். நான்

விரும்புவதையே அவர்கள் விரும்ப வேண்டும். நான் பிரசங்கிப்பது போல அவர்கள் பிரசங்கிக்க வேண்டும் என்று சதாம் உசேன் பாணியில் சட்டாம்பிள்ளை வேலை பார்த்தேன். சங்கடம்தான் மிஞ்சியது.

என்னை மாற்றிக்கொண்டேன். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கிருபை உண்டு. அதன்படியே அவர்கள் செயலாற்றுவதற்கு இடங்கொடுக்க வேண்டும் என்ற புத்தி வந்தது. கடிந்து கொள்வதற்குப் பதிலாக உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைப் பேச ஆரம்பித்தேன். இன்றோ எனது சபையில் நடைபெறும் பெண்கள் ஐக்கியம், மன்றாட்டுக் குழு, மருத்துவமனை ஊழியம், எல்லாவற்றையும் என் மனைவியே தலைமை தாங்கி மிகப் பொறுப்பாக நடத்துகிறார்கள்.

மாதத்திற்கு ஒரு முறையாகிலும் என் முழுக்குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு மாலை வேளைகளில் சற்றுப் பூங்கா வரைக்கும் சென்று சந்தோஷமாக அளவளாவி விட்டு சிற்றுண்டி அருந்தி விட்டு மனமகிழ்ச்சியோடு வீடு திரும்புகிறோம். இதனால் பெரிய செலவு ஒன்றும் வந்து விடுவதில்லை. மாறாக எவ்வளவு பணம் கொடுத்தாலும் கிடைக்காத அன்பும் ஐக்கியமும் குடும்பத்தில் நிலவுகிறது.

குடும்பத்தை குதுாகலமாக வைத்துக்கொள்வது மாத்திரமல்ல கர்த்தர் நமக்குக் கொடுத்த பிள்ளைகளை சரியான முறையில் வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம். இதைச் செய்ய தவறினதினால் பிள்ளைகள் நிமித்தம் வந்த தொல்லையினால் ஊழியத்தைத் தொலைத்து விட்டவர்கள் அதிகம்பேர். பிள்ளைகளை சிறப்பாக வளர்ப்பது முக்கியமல்ல. அவர்களைத் தகப்பனானவன் **கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாக** இருக்க வேண்டும்.

நீங்கள் எதைச் சொன்னாலும் மறுப்பின்றி வெறுப்பின்றி உடனே கீழ்ப்படியத்தக்க விதத்தில் உங்கள் பிள்ளைகளின் மேல் உங்களுக்கு ஆதிக்கம் இருக்க வேண்டும். சபைக்கு நீங்கள் தலைவராக இருப்பதற்கு



தலைமைத்துவப் பயிற்சி அளிக்கும் நிலையமே உங்கள் குடும்பம்தான். உங்கள் பிள்ளைகளை கீழ்ப்படியப்பண்ண முடியாவிட்டால் நிச்சயம் உங்கள் சபையினரையும் கீழ்ப்படியப்பண்ண முடியாது. சபைக்குத் தலைவராக நிற்பதற்கு முன்பு குடும்பத்தில் தலைவருக்குரிய அதிகாரத்தை சிறப்பான முறையில் பயன்படுத்துங்கள்.

ஏனோ தெரியவில்லை, இங்கே தான் ஊழியர்கள் தொய்வடைந்து விடுகிறார்கள். ஏலியின் பிள்ளைகளைக் குற்றம் தீர்த்த சாமுவேல் தன் பிள்ளைகளை சரியாக வளர்த்ததாக எனக்கொன்றும் தெரியவில்லை. ஆவிக்குரிய தலைவர்களில் பலர் இங்கேதான் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

அன்பு ஊழியரே! பல ஊழியர்கள் தலைவர்கள் இக் காரியத்தில் ஒரு வேளை குறைவு பட்டிருக்கலாம். நீயோ தேவனுடைய மனுஷனே சகலத்திலும் தெளிவுள்ளவனாயிரு.

தீர்க்கதரிசியாகிய ஏசாயா 'நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்' (ஏசாயா 8:18) என்று சொல்வது போல் நீங்களும் சொல்லத் தக்கதான சாட்சியுடையவர்களாயிருங்கள்.

**2. பண விஷயத்தில் திறந்த புத்தகமாயிருங்கள்.**

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின போது குறிப்பிட்ட மற்றொரு காரியம் பண ஆசை இல்லாதவனாய் கண்காணியானவன் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். (I தீமோத்தேயு 3:3) ஆறாம் அதிகாரம் பத்தாம் வசனத்தில் பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஊழியக்காரனை தடுக்கி விழச்செய்கிற இடறலின் கற்களில் இந்தப் பண ஆசையும் ஒன்று. பணம்

எல்லாவற்றிற்கும் உதவும் என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பணத்தின்மேல் ஆசை அற்றவர்களாய் இருத்தல் அவசியம். விசுவாச மக்கள் எந்தக் காரியத்திற்காக காணிக்கையாகப் பணத்தை செலுத்துகிறார்களோ அந்தக் குறிப்பிட்ட காரியத்துக்கே அதை செலவழிக்க வேண்டும். மக்கள் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக மிகுந்த ஜெபத்தோடு தேவ சமூகத்தில் படைக்கிற போது அதனை அந்தக் காரியத்திற்கு செலவழிக்காமல் வேறு சொந்தக் காரியங்களுக்கு செலவழித்து விட்டால் விசுவாசிகள் விஷ ஊசிகளாக மாறி விடுவார்கள். எச்சரிக்கையாயிருங்கள்.

நான் ஒரு ஊழியரை அறிவேன். அவர் ஆயிரம் ரூபாய் கொடுக்கக்கூடிய 100 பேர் வேண்டும் அல்லது 500 ரூ கொடுக்கக் கூடிய 200பேர் வேண்டும் என்று புள்ளி விவரத்தின்படி ஆலயத்திற்கு இடம் வாங்க நிதிதேவை என்று விளம்பரம் கொடுத்தார். எவர் கொடுத்தார் எவ்வளவு கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் திடீரென்று அவர் வெளிநாடு போகிறேன் என்றுபோய், இருக்கிற பணத்தையும் செலவழித்து விட்டு ஏமாற்றத்தோடு திரும்பி வந்தார். தற்போது சபைக்கு இடம் வாங்கவில்லை. பரிதாபம் சமூக மையம் ஆரம்பித்து நடத்திவருகிறார். பாஸ்டர் என்ற பெயரை அவராகவே எடுத்து விட்டது ஒரு பெரிய காரியம்தான்.

உங்கள் ஊழியம் வளர வேண்டுமா? உங்கள் சபை கட்டி எழுப்பப்பட வேண்டுமா? உங்கள் குடும்பத்திற்கு ஆயிரம் தேவை இருந்தாலும் ஊழியத்திற்கென்று வந்த பணத்தை ஊழியத்திற்கே செலவு செய்யுங்கள். **விசுவாச ஊழியத்தில் எவருக்கும் நாம் கணக்குக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பது உண்மைதான். அதை நான் ஆமோதிக்கிறேன். ஆனால் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று என்றைக்கு வாய் திறந்துகேட்டு விட்டோமே அன்று முதல் பணம் கொடுத்தவர்களுக்கு கணக்கு காட்ட கடமைப்பட்டவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.**



தேவனுக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷர் முன்பாகவும் நாம் யோக்கியவான்களாக இருக்க வேண்டும். உண்மையுள்ளவர்கள் என்பதற்குப் பதிலாக யோக்கியதையுள்ளவர்கள் என்ற வார்த்தையை நான் பயன்படுத்தியிருக்கிறேன். இது நான் கண்டுபிடித்த வார்த்தையல்ல. கண்காணியாக இருக்க வேண்டியவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் I தீமோத்தேயு 3–ஆம் அதிகாரம் 2–ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள பட்டியலில் பவுல் குறிப்பிட்டிருக்கும் வார்த்தையே இது.

**3. விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள்.**

மேய்ப்பர்களாகிய நம்மைக் குறித்து எழும்பும் சாதகமான மற்றும் பாதகமான விமர்சனங்களை எள்ளளவும் வருத்தமின்றி கசப்பின்றி தாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு ஊழியர் மற்றொரு ஊழியரைக் குறித்து விமர்சிப்பதும் ஒரு ஊழியரை அவருடைய சபையார் விமர்சிப்பதும் இன்றைய காலக்கட்டத்தில் தவிர்க்க முடியாத ஒன்று.

மக்கள் யாரைத்தான் விமர்சிக்காமல் விட்டார்கள். உடன் பிறந்தோரே மோசேயை விமர்சிக்கவில்லையா. அவன் என்ன முஷ்டியை உயர்த்திக் கொண்டா போனான். அப்போஸ்தலனாகிய பவுலை சமுதாயம் விமர்சிக்கவில்லையா. அவன் என்ன அஞ்சி ஊழியத்தை விட்டா போய்விட்டான். இல்லவே இல்லை. ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் வருகிற விமர்சனங்கள் நம்மை பட்டை தீட்டும் உராய்வுகள். எந்த ஊழியன் விமர்சிக்கப்படுகிறானோ அந்த ஊழியனின் எதிர்காலமே மிக விலையேறப் பெற்றதாக மாறும்.

பழைய ஏற்பாட்டில் சவுலைப் பாருங்களேன். அவன் ஒரு பெரிய யுத்தத்திற்குப் போகிறான். ஆனால் பேலியாளின் மக்கள் இவனா நம்மை இரட்சிக்கப் போகிறான் என்று சொல்லி காணிக்கை கொண்டு வராமல் அவனை அசட்டை பண்ணினார்கள். அவனோ காது கேளாதவன் போல இருந்தான் (I சாமுவேல் 10:27) அருமையான மேய்ப்பர்களே!

உங்களை மாற்றார் தூஷிக்கும் போதும் உங்கள் சபையாரில் ஒருகூட்டம் தூற்றும் போதும், **சவுலைப்போல் காது கேளாதவர்களாய் இருக்கத் தீர்மானியுங்கள்.**

எல்லாருமே எல்லா வேளைகளிலும் நம்மைக்குறித்து தீதே பேசுகிறார்கள் என்று தப்புக்கணக்கு போட்டுவிடக்கூடாது. விசுவாசிகள் நம்மைக்குறித்து சொல்லுகிற பாதகமான காரியங்களை சற்று நமது சொந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பாதக அறிக்கைகளைக் கொண்டு நம்மை நாமே அமிலப்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நம்மில் நம்மை அறியாமலேயே ஒட்டிக்கொண்டிருக்கும் சில காரியங்களைச் சுட்டிக் காட்டும் அறிக்கைகளுக்காக ஸ்தோத்திரம் சொல்லி அவைகளை வெட்டி அப்புறப்படுத்தி விட வேண்டும்.

மெய்யான புகார்களை அது பொறாமையினால் வந்த கூற்றுக்கள் என்று சொல்லி நமக்கு நாமே புற்று நோயை வர வைத்துக்கொள்ளக்கூடாது. புற்று முற்றி விட்டால் ஊழியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஆண்டியானாலும் அரசனானாலும் தனக்கு முன் வருகிற விமர்சனங்களுக்கு முன்பாக நின்று விமர்சனக் கண்ணாடியில் தன்னைப் பார்த்து சரி செய்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

தாவீதுக்கு முன்பாக நாத்தான் நிற்கும் போது அவனை சாத்தானாக எண்ணாமல் தன் பிழையைக் கர்த்தருடைய சமூகத்தில் அறிக்கை செய்து தன்னை பலப்படுத்திக் கொண்டதினால் கர்த்தர் அவன் ஸ்தானத்தில் நிலை நிறுத்தினார். உங்கள் குறைகளை உங்களுக்குக் காண்பிக்கிறவர்கள் மேல் குரோதம் கொள்ளாமல் விமர்சனத்திற்கு இசைந்து கொடுங்கள்.

பொய்யான புகார்களுக்கும் இல்லாத இழி சொற்களுக்கும் எந்த நாளிலும் எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எவன் எப்படிப்பட்டதை வனைந்து புனைந்து உங்கள் மேல் சொன்னாலும் அதற்கு நீங்கள்



நடுங்கி ஒடுங்கிப்போக வேண்டிய அவசியமில்லை. ‘பொய்க்கு இறக்கைகள் உண்டு. எனவே அது பறந்து செல்லலாம். ஆனால் அதற்குக் கால்கள் இல்லை எனவே நிற்க முடியாது’ என்று பாஸ்டர் சுந்தரம் அய்யா அவர்கள் சொல்லுவார்கள்.

பொய்யான பிராதுகளை உண்டுபண்ணி ஒரு ஊழியரை அல்லது ஒரு ஊழியத்தை யாராலும் உடைக்கவும் முடியாது. அப்படி செய்யக்கூடும் என்ற நிலை ஒன்று இருக்குமானால் இன்றைக்கு ஒரு ஆவிக்குரிய சபையும் உருப்படியாக இருக்க முடியாது. எனவே உங்களைக் குறித்து சொல்லப்படுகிற பொய்யான விமர்சனங்கள் கொஞ்ச நாளைக்குப் பறக்கும், அதற்குத் தான் நிற்க முடியாதே. எனவே பறக்கும். எவ்வளவு நாளைக்கு? பின்னர் இறக்கும், ஜனங்களுக்கும் மறக்கும். உங்கள் வாழ்வில் ஆசீர் சுரக்கும் கவலைப்படாதீர்கள்.

ஒரு சில வேளைகளில் பொய்யான பிராதுகள் சில கிரியைகளைக் கூட நடப்பிக்கலாம். அதை நம்பி ஒரு பத்துப்பேர் நம்மைவிட்டுப் போகலாம். அதற்காக நொந்து வெந்து போய் விடாதீர்கள். சில வேளைகளில் கர்த்தர் இதை அனுமதிக்கத்தான் செய்கிறார் (நமது சபை) மிகுந்த கனி கொடுக்கும்படி சில கிளைகளை நறுக்கிப்போடுவது தேவனுக்கு ஏற்றதுதான். சில நாளைக்கு செடி மொட்டையாகத் தெரியும். கொஞ்ச காலத்தில் பூத்துக்குலுங்கும்.

ஒரு வளரும் குழந்தைக்கு பற்கள் விழுவதும் இயற்கைதான். சில நாளைக்குப் பொக்கையாகத் தெரியும். கொஞ்ச நாட்களில் முத்துப்பற்களும் முல்லைப்பூ போன்ற பற்களும் முளைத்துவிடும். ஆகவே பொய்யான புகார்களினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பீர்களானால் நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தர் உங்களை பெலனடையச் செய்து சத்துவத்தைப் பெருகப் பண்ணுவாராக.

**4. பொறுப்புகளை விசுவாசிகளுக்குப் பகிர்ந்து கொடுங்கள்.**

நமது ஊழியம் சீராக வளர வேண்டுமானால் ஓர் பிரமாணத்தைக் கடைபிடிக்க வேண்டும். **ஒருவரே பத்து வேலையை செய்யக்கூடாது.** அதைப்போன்று பத்துப்பேர் ஒரே வேலையை செய்யக்கூடாது. ஆனால் இன்றைக்கு நடைபெறுகிற காரியம் இதுதான். அநேக இடங்களில் போதகரே ஒலி ஒளி அமைப்பாளர், பாடகர், இசைக்கலைஞர் பிரசங்கிப்பாளர். சுருக்கமாகச் சொல்லப்போனால் எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் போதகரே.

இப்படி செய்வது உங்கள் சபை மக்களை சபை வளர்ச்சியைக் குறித்த பொறுப்பற்றவர்களாக்கி சபைக்கு அந்நியர்களாக, அடிமைகளாக மாற்றி விடுகிறதாகும். கர்த்தர் நம்மை இந்த முழுநேர ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். அதைப் போலவே இந்த ஆசாரிய அழைப்பைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் நம்முடைய விசுவாச மக்களைக் கர்த்தர் நேசிக்கிறார். நிரப்புகிறார். பயன்படுத்துகிறார். இந்த வெளிப்பாடு மேய்ப்பருக்கு மிகவும் அவசியம்.

தாலந்து பெற்றவர்களைத் தகுந்த முறையில் நாம் பயன்படுத்தும்போது நமது சபை மிகச்சிறப்பான முறையில் வளர்வது மாத்திரமல்ல, நமது ஆராதனைகள் உற்சாகமுள்ளதாகவும், உயிரோட்டமுள்ளதாகவும் இருக்கும். அப்போஸ்தலர் காலத்திலேயே பந்தி விசாரிப்பை சபைக்குக் கொடுத்துவிட்டு ஜெபத்திலும் பிரசங்கிப்பதிலும் மாத்திரம் ஊழியர்கள் தரித்திருந்தார்கள். பந்தி விசாரிப்புகள் என்றால் வெறும் சாம்பார் பக்கெட்டையும் இலைகளையும் சுமப்பது என்று அர்த்தமல்ல.

ஆதி அப்போஸ்தல சபையில் பந்தி விசாரிப்புக்காரனாகிய ஸ்தேவான் பெரிய அற்புதங்களை அடையாளங்களை செய்தான். அப்போஸ்தலர்கள் அவனை அனுமதித்தார்களே தவிர அமுத்தி வைக்கவில்லை. அப்போஸ்தலர் 6:7ல் தேவ வசனம் விருத்தியடைந்தது. **சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று.** உங்கள் சபை பெருக உங்கள் சபை மக்களை உங்கள் ஊழியத்தில் உதவியாளராகப் பயன்படுத்துங்கள்.



ஐயோ! போதும் போதும் இப்படிச் செய்து பலர் பட்டபாடுகளை நான் பார்த்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்லலாம். சில இடங்களில் இப்படி விசுவாசிகளைப் பயன்படுத்தி விபரீதங்களை சிலர் சந்தித்திருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். அதற்காக எல்லா இடங்களிலும் அப்படி நடக்கும் என்று நம்பி நாம் வாளா இருந்து விடக்கூடாது.

ஒரு வீட்டில் கேஸ் ஸ்டவ் வெடித்து விட்டது என்பதற்காக ஐயோ நம்ம வீட்டு ஸ்டவ்வும் வெடித்துவிடும் என்று நீங்கள் தூக்கி வெளியே போட்டு விடுவீர்களா? அல்லது பயன்படுத்துவதை நிறுத்தி விடுவீர்களா? அல்லது அவர்கள் வீட்டில் வெடித்ததைப்போல நமக்கு ஆகக்கூடாது என்று சர்வ கவனத்துடன் பயன்படுத்துவீர்களா? நிச்சயமாக மூன்றாவதைத்தான் செய்வீர்கள் என்று நம்புகிறேன். அப்படியே உங்கள் சபைகளிலும் சகல ஞானத்தோடும் எதைச் செய்தாலும் ஜெயம் கிட்டும். பயம் தேவையில்லை.

கத்தியில் காய் நறுக்கும்போது கை விரலில் பட்டு விட்டால் கத்தி குத்தி விட்டது என்பீர்களா? கத்தியில் குத்திக்கொண்டேன் என்பீர்களா? கத்தி தானாகக் குத்தாது, பயன்படுத்துகிறவனின் அஜாக்கிரதையினால் தான் குத்துகிறது.

அப்படியே விசுவாசிகளாக விபரீதங்களைக் கொண்டு வருவதில்லை. உங்கள் தலைமைத்துவ அதிகாரத்தை நீங்கள் பயன்படுத்தாமல் உங்கள் ஸ்தானத்தை விட்டு நீங்கள் கீழே இறங்கி விடுகிற வேளையில் தான் உங்களுக்கு விபத்துகளும் விபரீதங்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

முந்தின அதிகாரங்களில் வாசித்ததைப்போல் ஜெபிக்க, செய்திகளை ஆயத்தம் செய்ய, சபையாரை சந்திக்க ஏராளமான நேரம் உங்களுக்குத் தேவை. எனவே இவைகளைத் தவிர்த்து மற்ற காரியங்களை நம்முடைய சபை மக்களில் தேறின, சாட்சி பெற்ற, கிருபையுள்ள, தாழ்மையான விசுவாசிகளிடத்தில் ஒப்புவியுங்கள்.

ஆராதனையில் முன் நின்று பாட்டுப்பாட, வெளிக்

கூட்டங்களுக்கு முன்னேற்பாடுகளை செய்ய, சிறுவர்களுக்கான ஞாயிறு பள்ளி, சிறு சிறு சுவிசேஷக் குழுக்களின் தலைமை அந்தந்தக் கிருபை பெற்றவர்களிடத்தில் பகிர்ந்தளியுங்கள். நான் ஆரம்பத்திலேயே சொன்னபடி நீங்கள் ஒருவரே பத்துக் காரியத்தை செய்ய முற்பட்டால் பத்தினையும் பூர்த்தியாக நிறைவேற்ற முடியாது.

மோசே காலத்திலேயே ஜனங்களை விசாரிக்கிற மிகப்பெரிய அலுவலில் மோசேக்கு உதவியாக இஸ்ரவேல் ஜனத்தாரிலேயே எழுபது பேரைத் தெரிந்து கொண்டு அவர்களிடத்தில் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்தபோது மோசே தன்னுடைய காரியங்களை இலகுவாய் கவனிக்க முடிந்தது என்று பார்க்கிறோமே. நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை சிந்தித்துத் தகுதியுள்ளவர்களிடத்தில் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுங்கள்.

**5. ஜெபக்குழுக்களை உற்சாகப்படுத்துங்கள்**

ஜெபமே ஜீவன் – ஜெபமே ஜெயம் என்ற பாடல் வரிகள் தனி மனிதர்களுக்கு மாத்திரமல்ல. தேவனுடைய சபைக்கு அது இரத்த நாளம், ஜீவன், ஜெயம் என்பதை மறந்து விடக்கூடாது. எந்த சபைக்குக் கிரமமான ஜெப அனுபவம் இருக்கிறதோ அது மாதந்தோறும் கனிதரும் விருட்சமாய் வளர்ந்தோங்கும். எந்த சபை ஜெபத்தை இரண்டாம் இடத்திற்குத் தள்ளுகிறதோ அந்த சபை குளறுபடிகளுக்கும் குழப்பத்திற்கும் கும்பிடு போட்டு வரவேற்பு அளிக்கிறது என்பது இரகசியம்.

உங்கள் ஊழியம் வளர நீங்கள் ஜெபிப்பது மாத்திரமல்ல உங்கள் சபை ஜெபிக்கும் சபையாக மாற வேண்டும். அந்தியோகியா பட்டணத்தில் இருந்த சபையில் சவுலும் பர்னபாவும் மற்றவர்களும் போதகர்களாகவும் தீர்க்க தரிசிகளாகவும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருந்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் 13:2–இல் எழுதப்பட்டுள்ளது. கர்த்தர் அங்கேயிருந்து தான் மிஷனெரிகளை எழுப்பினார்.



எந்த சபை ஜெபிக்கிறதோ அந்த சபை ஊழியம் செய்யும். எந்த சபை ஜெபிக்கிறதோ அந்த சபை ஊழியத்திற்குக் கொடுக்கும். எனவே உங்கள் ஊழியம் வளர உங்கள் மக்களை ஜெபிக்கிறவர்களாய் மாற்றுங்கள். அவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுங்கள். வட்டார ஜெபக்குழுக்களை ஏற்படுத்துங்கள். உங்கள் சபை மக்களில் பல குடும்பங்கள் ஒரே பகுதியிலிருந்து எத்தனை எத்தனை வருகிறதோ அப்படிப்பட்ட பகுதிகளைத் தெரிவு செய்து அதைவட்டங்களாகப் பிரித்து வட்டார ஜெபக் குழுக்களை ஏற்படுத்துங்கள். (Area Prayer Cell)

முன் சொன்னது போலவே இதிலும் ஏதாகிலும் கோளாறு வந்து விடுமா என்று ‘தோமா’ – தனமான கேள்வியைக் கேட்டு விடாதீர்கள். ஜெபத்தின் ஐக்கியம் ஜெயத்தின் ஐக்கியம். இந்த ஜெபக்குழுக்களை முன்னின்று நடத்த ஜெப ஆவிகள் நிறைந்த தன் குடும்பத்தோடு சாட்சி பெற்ற ஒரு நபரைப் பொறுப்பாளராக ஏற்படுத்துங்கள்.

‘உழவனுக்கு நண்பன் மண்புழு
ஊழியனுக்கு நண்பன் ஜெபக்குழு’

இந்த வாசகத்தை என்றும் மறந்து விடாதீர்கள். எந்த அளவிற்கு உங்களுக்குப்பின்னால் ஊழியத்திற்கென ஜெபிக்க மக்களைத்திரட்டி வைத்திருக்கிறீர்களோ அந்த அளவே உங்கள் பெலன். உங்கள் பெலன் எவ்வளவோ அந்த அளவுக்கே ஊழியத்தில் பலன்.

என்னுடைய ஊழியத்தின் பின்பலமே எனக்காய் ஜெபிக்கும் ஒரு சிறு கூட்டம்தான். தன்னை மறந்து தங்கள் குடும்பத்தை மறந்து கதறிக்கண்ணீர் வடித்துக் கருத்தாய் ஜெபிக்கும் ஒரு சிறு கூட்டத்தை வைத்திருக்கிறேன். சபைக் காரியங்கள், இலக்கியப்பணி, எனக்குவரும் ஏராளமான கடிதங்கள் இவைகள் எல்லாம் அவர்களுக்குக் குறிப்பு அனுப்பப்படும். அவர்கள் கூடி கர்த்தருடைய முகத்தைத்தேடி ஜெபித்து என்னைத் தாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

**6. சுவிசேஷகனுடைய வேலையைச் செய்**

ஒரு போதகர் எந்த சூழ்நிலையிலும் சுவிசேஷப்பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடக்கூடாது. ஆடுகள் குட்டி போட வேண்டும். நான் மேய்த்துக்கொண்டிருப்பேன் என்று அடுத்தவர்களைப் பார்த்து சொல்லிக்கொண்டு உங்கள் அழைப்பை அலட்சியப்படுத்தி விடாதீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் போதகனும் மேய்ப்பனுமாக இருந்த தீமோத்தேயுவுக்கு எழுதுகிற போது சுவிசேஷகனுடைய வேலையைச் செய் (II தீமோத்தேயு 4:5) என்று கட்டளையிட்டிருக்கிறார்.

தன்னுடைய ஊழியத்தில், அப்போஸ்தலனாக மேய்ப்பனாக, போதகனாக, ஊழியம் செய்வதைக் காட்டிலும் சுவிசேஷப் பணியை செய்வதை பிரதான கடமையாக அப்போஸ்தலனாகிய பவுல் கொண்டிருந்தார். அதனால்தான் சுவிசேஷத்தை நான் பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ என்று அங்கலாய்க்கிறார்.

நமது மந்தையிலுள்ள விசுவாசிகளுக்கு நாம் மேய்ப்பர் என்பதை ஒரு பக்கம் மேன்மை பாராட்டுகிற அதே வேளையில் பிரதான மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவின் பார்வையில் நாமும் ஒரு ஆட்டுக்குட்டி தான் என்பதை மறுபக்கமாக சிந்தையில் வைக்க வேண்டும். நமது விசுவாசிகள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டும் என்று நாம் எப்படி விரும்புகிறோமோ அப்படியே நாமும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும் என்று நமது பிரதான மேய்ப்பன் விரும்புகிறார்.

நம்முடைய கிரியைகளுக்குக் கர்த்தர் அங்கீகாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்கு நல்ல ஒரு அளவுகோல் நமது மூலமாய் ஆத்துமாக்கள் சபைக்குள் வரவேண்டும். சுவிசேஷத்தை அறிவித்து தனியாக ஆத்துமாக்களை சந்தித்து முறையாக அவர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தி அவர்களை சரியாக சபைக்குள் கொண்டு வரவேண்டிய பொறுப்பு உங்கள் தலையின் மேல் இருக்கிறது.

ஒரு மோசமான உதாரணத்தை எழுதுவதற்காக



என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஒரு தொப்பி வியாபாரி தொப்பி போட்டிருப்பதைப் பார்த்தவுடன் அவன் கூடையில் வைத்திருந்த எல்லாத் தொப்பிகளையும் எல்லாக்குரங்குகளும் எடுத்து மாட்டிக்கொண்டதாம். இப்பொழுது குரங்குகளைத் தொப்பியைக் கழற்ற வைக்க வேண்டும். ஒரு பெரிய உபதேசம் பண்ணவில்லை. மாறாக அவைகளைப் பார்க்கும்போது இவன் முதலாவது தொப்பியைக் கழற்றிப்போட்டான். அவ்வளவுதான் எல்லாக்குரங்குகளும் தொப்பியைக் கழற்றிப்போட்டுவிட்டது.

எதற்கு சொல்கிறேன் என்று புரிகிறதா, உங்கள் விசுவாசிகளை சுவிசேஷப்பணியில் ஈடுபடுத்த மிக நீண்ட பிரசங்கத்தை நீங்கள் செய்யவேண்டாம். மாறாக உங்கள் சபையார் எதை செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதையே அவர்களுக்கு முன்பாக நீங்கள் செய்து காண்பியுங்கள்.

இப்பொழுது எனக்கு நேரமில்லை, அந்த அனுபவங்களையெல்லாம் நான் கடந்து வந்துவிட்டேன். இப்பொழுது நான் பெரிய பாஸ்டர் எனவே இதையெல்லாம் நான் கவனிக்க முடியாது. சபையாருக்கு செய்தியை ஆயத்தம் பண்ணவே நேரமில்லை என்று சொல்ல உங்களுக்கு உரிமை இல்லை.

இப்படி சிலர் உயர்வு வரும்பொழுது சுவிசேஷப்பணியை மறந்து விட்டார்கள். செய்வதற்கு மறுத்துவிட்டார்கள். நல்ல போதகர்களாய் இருந்த அவர்கள் சுவிசேஷப்பணியை விட்டதினிமித்தம் தற்போது நல்ல நிர்வாகஸ்தர்களாக, நல்ல விடுதிக் காப்பாளராக மாறிப்போயிருக்கிறார்கள். உங்கள் ஆயுள் முடியும் வரை மேய்ப்பராக இருக்க விரும்புகிறீர்களா அல்லது ஆவிக்குரிய நிர்வாகத்துறைக்கும் சமூகத்துறைக்கும் மாற்றலாகிப்போக விரும்புகிறீர்களா.

நீயோ தேவனுடைய மனுஷனே மனத் தெளிவுள்ளவனாக இருந்து இவைகளை சிந்தித்து உனது நேரத்தை உலகக் காரியங்கள் திருடிக்கொள்ளாமல்

உன்னதர் இயேசு கொடுத்த ஊழிய தரிசனத்தை நிறைவேற்றும்படி சுவிசேஷகனுடைய வேலையை செய். அப்பொழுது நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியனே என்ற சாட்சி பெறுவாய்.

**7. விசுவாசிகளின் கிரியைகளுக்கு அங்கீகாரம் பண்ணுங்கள்**

நாம் நம்முடைய பிள்ளைகள் நலமான காரியம் ஏதேனும் ஒன்றை செய்துவிட்டால் மௌனமாயிருப்பதில்லை. அவர்களைப் பாராட்டுகிறோம். பரிசு வழங்குகிறோம். பத்துப் பேரிடத்தில் சொல்லிப் பகிர்ந்துகொள்கிறோம். இதுதான் தகப்பனுடைய இயற்கையான இருதயம்.

ஆனால் ஆவிக்குரிய பிள்ளைகள் அரிய காரியங்களை செய்கிறபோது சில தகப்பன்களுடைய இருதயம் செயலிழந்து விடுகிறது மிகவும் வருத்தத்திற்குரியது. உங்கள் சபை வளர வேண்டுமானால் உங்கள் விசுவாச மக்களை அவர்களின் கிரியைகளுக்காகப் பாராட்டுங்கள். அதிலே அவர்கள் வளரும்படி உற்சாகமூட்டும் வார்த்தைகளைச் சொல்லுங்கள்.

நமது பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் முதல் மதிப்பெண் பெற்றுவிட்டு அல்லது ஒரு அழகான படத்தை வரைந்து வைத்துவிட்டு இதைக் கண்டு என் அப்பா என்ன சொல்வார் என்று ஆவலோடு ஏங்கி நிற்பது போலவே நமது விசுவாசிகளும் அவர்களுடைய காரியங்களுக்கான நமது கருத்துரை என்ன என்பதைக் கண்டறிய ஆசை உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

நம்முடைய சபை ஆராதனையில் ஒரு சகோதரனாவது அல்லது சகோதரியாவது முதன் முறையாய் ஜெபித்திருப்பார்களானால் ஆராதனை முடிந்தவுடன் இன்று வெகு சிறப்பாக ஜெபித்தீர்களே நல்லது என்று ஒரு வார்த்தை சொல்லிப்பாருங்கள். அந்த ஆத்துமா அடக்க



முடியா உற்சாகம் பெற்று அதுமுதல் ஆராதனையில் தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பிக்கும்.

அதைப்போலவே சாட்சி சொல்லுகிறவர்கள் பாடுகிறவர்கள், சரீரத்தின்படி சபைக்காய் பாடுபடுகிறவர்கள் ஆகியோரை தனியாகவோ அல்லது பொதுவாகவோ நாலு வார்த்தைகள் உற்சாகப்படுத்தும்படி நீங்கள் சொல்லப் பழக வேண்டும். அப்படிச் செய்தால் உங்கள் சபை வளரும். உங்கள் சபையாருக்கு உங்கள் மேலுள்ள மதிப்பும் வளரும்.

விசுவாசிகளைப் பாராட்டுவது என்பது அவர்களுக்குத் துதிபாடுவது அல்லது ஒத்து ஊதுவது என்று மிகக்குறுகிய மனப்பான்மை கொண்டு விடாதீர்கள். ஒரு எச்சரிக்கை கொடுக்க விரும்புகிறேன். உங்கள் விசுவாசிகளின் தாலந்துகளுக்காக நீங்கள் அவர்களைப் பாராட்டத் தவறினால் உங்கள் பக்கத்து சபை பாஸ்டர் அவர்களைப் பாராட்ட ஆரம்பிப்பார். பள்ளமான இடத்தினைப் பாய்ந்து செல்லும் வெள்ளம்போல், பாராட்டும் இடத்தினைப் பார்த்து செல்லும் உள்ளம் மறந்து விடாதீர்கள்.

உங்கள் குடும்பத்தில் உங்கள் சகோதர சகோதரிகளை நீங்கள் வாழ்த்த மாட்டீர்களா உங்கள் பெற்றோரை நன்றி சொல்லி வாழ்த்த மாட்டீர்களா. அப்படித்தானே நமது சபையும், நமது சபையாரெல்லாம் யார்? கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு அருளப்பட்ட குடும்ப அங்கத்தினர்கள் தானே, அவர்களைப்பாராட்ட நமது மனம் ஏன் மறுக்கிறது? அதற்கென்ன கஞ்சத்தனம். காசு பணமா போய்விடுகிறது.

எனது சபையாரில் எவரேனும் புதிய உடை உடுத்திக் கொண்டு வந்தாலும் நான் விடுவதில்லை, 'ஒ, இது புதுசா மிக அழகாக இருக்கிறதே நீங்களும் தான்?' என்று அவர்களைப் பாராட்டுவேன். அவர்களின் முகமலர்ச்சி எனது மனமகிழ்ச்சி சபையாரை வாழ்த்துங்கள் ஆசீர்வதியுங்கள்

அங்கீகரியுங்கள்.

மிகவும் பலவீனமான, இஸ்ரவேலில் மிகச்சிறிய குடும்பத்தைச் சார்ந்த கிதியோனைக் கர்த்தர் அழைக்கும் பொழுது 'பராக்கிரமசாலியே' என்றார். ஆம் அந்த உற்சாகமூட்டும் வார்த்தை அவன் உள்ளத்திற்கு உரமாய் மாறியது. நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை சிந்தித்து மனத்தெளிவோடு உன் விசுவாசிகளை உற்சாகப்படுத்து. ஒவ்வொரு ஆராதனையின் பிரசங்கத்துக்கு முன்பாகவும் நான் உங்களைப் பார்த்ததில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் என்று மக்களிடம் சொல்லு. இப்படி செய்தால் உன்னையும் உன் வசனத்தைக் கேட்போரையும் இரட்சித்துக் கொள்வாய்.

**8. சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளாதீர்கள்**

ஆண்டவர் அவருடைய இரத்தத்தினாலே கிரயமாய் வாங்கின அவருடைய மந்தையை மேய்க்க நம்மை நியமித்திருக்கிறார். அந்த மந்தையை இறுமாப்பாய் மேய்த்திடக் கூடாது. நமது விசுவாசிகள் ஆடுகள் என்றாலும் அவர்களும் தேவனுக்கு முன்பாக ஆசாரியரும் இராஜாக்களுமாய் இருக்கிறார்கள். அவர்களுக்குரிய கனத்தைக் கொடுத்து சகல கண்ணியத்தோடு ஆளுகை செய்ய வேண்டும்.

நான் சொல்வதைத்தான் செய்ய வேண்டும். இஷ்டமானால் இரு. கஷ்டமாக இருந்தால் போய்விடு என்று ஒரு மேய்ப்பன் தன் மந்தையைப் பார்த்துச் சொல்வது வீர வசனமாக இருக்குமே தவிர விவேகமாக இருக்காது.

நமக்குள் இருக்கும் அதே பரிசுத்த ஆவியானவர் தான் நமது சபையிலுள்ள விசுவாசிகளுக்குள்ளேயும் இருக்கிறார். எனவே கர்த்தருடைய ஊழியக்காரனானவன் சகல சாந்தத்தோடும் தாழ்மையோடும் சபை மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல்



தீமோத்தேயுவுக்கு எழுதுகிறபோது முதிர்வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவர்களைத் தகப்பனைப்போல பாவித்து புத்தி சொல்ல வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

நாம் என்னதான் மிகப்பெரிய ஊழியராக இருந்தாலும் முதியவர்களைத் தாய் தகப்பன் ஸ்தானத்தில் வைத்தும் பால்ய ஸ்திரீ புருஷரை சகோதர சகோதரிகளாகவும் பாவித்து கிறிஸ்து நம்மை வைத்திருக்கிற விசாரிக்கும் ஊழியத்தில் அமர்ந்து புத்தி சொல்லவேண்டும்.

நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை சிந்தித்து மனத் தெளிவுள்ளவனாக இருந்து சபையாரை சாந்தமாக விசாரித்து, கடினமனதாய் அல்ல, கனிவோடு புத்தி சொல்லி கருத்தோடு அவர்களுக்காய் ஜெபித்து – வந்தால் கர்த்தர் சபையை உமக்காகக் கட்டி எழுப்புவார்.

**9. மற்ற மேய்ப்பர்களோடு ஐக்கியமாயிருங்கள்**

ஊழியங்களில் வித்தியாசமுண்டு. ஆவியானவர் ஒருவரே அழைப்பில் வித்தியாசம் உண்டு. நம்மை அழைத்தவர் ஒருவரே. சபைகளில் வித்தியாசம் உண்டு. சபையின் தலை ஒருவரே. இதை ஒவ்வொரு போதகரும் முதற்கண் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். உபதேச வித்தியாசங்கள் இருக்கலாம். அவைகள் நாம் இன்னார் என்று காண்பிப்பதற்கு அவசியமே. அதே வேளையில் உபதேச வெறியர்களாக மேய்ப்பர்கள் மாறிவிடக்கூடாது.

நாம் தேவனுக்கு உடன் வேலையாட்கள். தேவனே தமது சபையைக் கட்டுகிறார். உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கல்வாரி முதல் அவர் வருகை வரை உள்ள பூரணமாக்கப்பட்ட எல்லாப் பரிசுத்தவான்களும் அவருடைய சரீரமாகிய சபையாக எடுத்துக் கொள்ளப்படப் போகிறார்கள். அப்பொழுது கோட்டுப் போட்டவர், ஜிப்பா போட்டவர், மீசை வைத்தவர், மீசை வைக்காதவர் எல்லோருமே அந்த சரீரத்தில் அங்கமாக இருப்பர். அவர்

தயாளனாக இருக்க நீங்கள் வன்கண்ணனாக இருக்கக்கூடாது.

ஆரோக்கியமான உபதேசத்தைப் பிரசங்கிக்கும் எல்லா சபை போதகர்களோடும் நீங்கள் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படி செய்வது உங்கள் ஊழியத்திற்கு உதவியாகவும் உற்ற பாதுகாப்பாகவும் இருக்கும்.

ஒரு பெரு நகரத்திலுள்ள போதகர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளான வந்தனங்கள் கூட சொல்லிக்கொள்ள முடியாமலிருக்குமானால் அவர்களுக்குள்ளே கிறிஸ்துவின் சுபாவம் எப்படி வளர முடியும். நீங்கள் எல்லாரோடும் அன்பும் ஐக்கியமும் வைத்திருக்கும்போது உங்கள் அறிமுகத்தினிமித்தமே உங்கள் ஆடுகளைக் கவர்ந்து கொள்ளாதிருக்க பேருதவியாக இருக்கும்.

உள்ளூர் போதகர்களோடு கூட உள்ள உறவு விரிசல் அடையுமானால் அதனுடைய பாதிப்பை உங்கள் சபையில் நீங்கள் அனுபவிக்க வேண்டி இருக்கும். நான் முன்பக்கங்களில் எழுதியதாக எனக்கு நினைவு உண்டு. என்னோடு நெருக்கமாக இருந்த ஒரு போதகருக்கும் எனக்கும் இடையில் இருந்த உறவு சில காரணங்களால் முறிந்து போயிற்று. ஆனால் அந்தப் பாதிப்பை என் சபையில் அனுபவித்தேன்.

அந்தப் போதகருக்கு என்னுடைய முகத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் என்ன நினைப்பேனோ என்று அவர் யோசிக்கவில்லை. சில முத்தான ஆத்துமாக்களின் உள்ளங்களில் விஷ வித்துக்களை விதைத்து கொத்திக் கொண்டு போய்விட்டார். ஆகவே நீங்கள் கூடுமானவரை எல்லா மேய்ப்பர்களோடும் இணங்கிப் போங்கள். இசைந்து போங்கள். சில இழப்புகள் வந்தாலும் இன் முகத்தோடு தாங்கிக்கொள்ளுங்கள்.



மித்ருக்களை சத்துருவாக்கிக் கொள்வது அல்ல. சத்துருக்களை மித்ருவாக மாற்றுவதே ஒரு ஊழியக்காரனின் வெற்றியின் பாதை. அந்தப் பாதையில் ஓட நான் முயற்சிக்கிறேன். நீங்களும் ஓட வேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறேன்.

நான் வேறொரு ஸ்தாபனத்தின் மாவட்ட மத்தியப் போதகராக இருந்தாலும் எனது மாவட்டத்திலுள்ள மற்ற சபைகளின் போதகர்கள் ஏறக்குறைய எல்லோருமே என்னோடு அன்போடு ஐக்கியத்தோடு இருக்கிறார்கள். அவர்களில் சிலர் குடும்பங்களில், ஊழியங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளை நான் முன்னின்று நடத்துகிறேன். அதுபோல் அழைப்பு வரும் மற்ற சபைக் கூட்டங்களுக்குத் தவறாமல் சென்று கலந்து என் அன்பையும் ஐக்கியத்தையும் தெரியப்படுத்துகிறேன்.

சில ஊழியர்கள் உங்களைக் குறித்து தீதான விமர்சனங்கள் செய்திருக்கலாம். ஆனாலும் அவைகளைக் குறித்து கிஞ்சிற்றும் கவலைப்பட வேண்டாம். அவர்களை நீங்கள் நேசிக்க நேசிக்க, அவர்கள் மனம் மாறி விடுவார்கள். நான் மற்ற சபைகளை நேசிப்பது மாத்திரமல்ல அவர்களுக்காக ஜெபிக்கிறேன். என் சபையாரை ஜெபிக்க வைக்கிறேன்.

ஒரு வசனத்தைக் கவனியுங்கள் 'உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன்' (ஆதி 12:3) இந்த வசனத்தின்படி வாக்குத்தத்தம் பெற்ற மற்ற ஊழியர்களை நாம் ஆசீர்வதிக்கும் போது கர்த்தர் தமது வாக்கின்படி நம்மை ஆசீர்வதிக்கிறார். இது என்னை ஆவிக்குள் நடத்தினவர்கள் சொல்லித்தந்த பாடம். இதனை என் ஊழியத்தில் பயன்படுத்தி நான் வெற்றி காண்கிறேன்.

நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை சிந்திந்து மனத்தெளிவுள்ளவனாயிருந்து மற்ற சபைப் போதகர்களை

மதித்து அவர்களை அன்பு பாராட்டி ஐக்கியமாயிரு. அப்பொழுது கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன் சபையைப் பெருகவே பெருகப்பண்ணுவார்.

**10. மந்தைக்கு உத்தரவாதம் செய்கிறவர்களாய் விழித்திருங்கள்**

உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால்...... என்று தேவனுடைய சபைக்கு பவுல் எவ்வளவு ஆணித்தரமாய் நம்மைக் குறித்து எழுதுகிறார் பாருங்கள்.

நம்முடைய மந்தைக்கான உத்தரவாதத்தைப் பெற்றுள்ள நாம் அவர்களுக்காக விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். லூக்கா 15–ஆம் அதிகாரத்தில் இயேசு சொன்ன காணாமல் போன மூன்று காரியங்களைக் கொஞ்சம் கவனித்துப்பாருங்கள். 1. காணாமல் போன ஆடு, 2. காணாமல் போன வெள்ளிக்காசு, 3. காணாமல் போன மகன், இந்த மூன்றைக் குறித்தும் நீங்கள் அழகாகப்பிரசங்கித்திருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நூறு ஆடுகளை மேய்க்கப் போன இவன் அவைகளை மேய விட்டு விட்டு எங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆடு காணாமற்போனது அது தப்புதான். ஆடு போகும் போது கண் காணாதவனாக இருந்தது மேய்ப்பனின் தவறுதானே.

சபையைவிட்டு சில ஆத்துமாக்கள் போய்விட்டால் அது அந்த ஆத்துமாவின் தப்புதான். உங்களோடு ஒத்துக் கொள்ளுகிறேன். அந்த ஆடு மேய்ப்பவனுக்கு துரோகம் செய்யவேண்டும் என்றோ ஓடிப்போக வேண்டும் என்றோ தீர்மானித்து ஓடவில்லை. பாய்ந்து பாய்ந்து மேய்ந்தது! பள்ளத்திலே சாய்ந்தது. அதுவாக எழும்பி வரமுடியாது.



போதகர்களே! அந்த ஆட்டைக் குறித்த உத்தரவாதம் உங்களுக்கு உண்டு. அவர்களாகவே வரட்டும் என்று அலட்சியம் பண்ணாதீர்கள்.

முள்ளிலும் கல்லிலும் காயம்பட்ட ஆடு நோவினால் சாவு கொள்ளா முன்பு நீங்கள் தேடிச்சென்று உங்கள் நேசக்கரத்தை நீட்டுங்கள். உங்களைவிட்டு ஓடிப்போன ஆத்துமாக்களை தன் இடுக்கண்கள் மத்தியிலேயும் என் ஊழியக்காரர் வரமாட்டாரா என ஏங்குகிறது. நீங்களோ கல் நெஞ்சாய் இருக்கலாமா? அப்படியே இருந்தால் 99 ஆடுகள் 98 ஆகிவிடும் பின்பு 98 ஆடுகள்....?....? கவனமாயிருங்கள்.

ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசு வைத்திருந்தாள். ஒன்று காணாமல் போய்விட்டது. இங்கேயும் ஒன்றை கவனியுங்கள். காசு காணாமல் போனதற்கு யார் காரணம் காசா? அல்லது காசைக் கவனக் குறைவாக கையாண்ட ஸ்திரீயா? அது வெள்ளிக்காசாயிற்றே, எவ்வளவு கவனமாய் இருந்திருக்க வேண்டும். நல்ல வேளை காசு வீட்டை விட்டு வெளியே போகவில்லை. எப்படியோ ஸ்திரீ தேடிக் கண்டுபிடித்து விட்டாள்.

மேய்ப்பர்களே! ஒரு உண்மையை சொல்லட்டுமா. நம்முடைய தவறான அணுகுமுறையால் சில வெள்ளிக்காசுகளைத் தவற விட்டு விட்டோம். கையிலும் பையிலும் இருக்க வேண்டிய அவைகள் சபையில் பெயரளவுக்கு வருவதில்லை. வீட்டின் ஏதோ ஒரு மூலையில் இருக்கிறது. உத்தரவாதமுள்ள மேய்ப்பரே விளக்கைக் கொளுத்துங்கள். வீட்டைப் பெருக்குங்கள். விழுந்த காசை எடுத்து பத்திரப்படுத்துங்கள். காசு தானாக உருண்டு வராது. நீங்கள் தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

இளைய மகன் வீட்டை விட்டுப் போய்விட்டான். அது அவன் குற்றம். இச்சை அவனை இழுத்துக்கொண்டது. அவனைத் தேடி நீங்கள் பின்னால் போக வேண்டியதில்லை.

நிச்சயமாக இளையமகன் இன்றோ நாளையோ திரும்பி வருவான். திரும்பி வருகிறவனிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டியது என்பது முக்கியம். திரும்பி வருவோரிடம் வீர வசனம் ஏக வசனம் பேசக்கூடாது. புண்படும்படி பேசாமல் புண்பட்ட மனதை உங்கள் பொன்னான வார்த்தைகளால் இதமாக்க வேண்டும்.

தகப்பன் மகனைத் தேடிப் போகவில்லை என்பது உண்மைதான். மகன் புத்தி தெளிந்து வந்த போது **தகப்பன் ஓடி கட்டிப்பிடித்து முத்தம் செய்தான்.** அத்தோடு விட்டானா. அவனை வீட்டிற்கு அழைத்து வந்து முன்பு அந்த வீட்டில் அவன் எப்படி இருந்தானோ அவனுக்கு அதே அங்கீகாரத்தை வழங்கினான்.

என் இனிய மேய்ப்பர்களே! நமது சபையை விட்டு ஏதோ ஒரு பிரச்சனையால் பிரிந்து சென்ற ஆத்துமாக்கள் மனம் திரும்பி புத்தி தெளிந்து திரும்ப சபைக்கு வரும்போது சட்ட திட்டங்களைக் காட்டி சங்கடப்படுத்தாதீர்கள். மாறாக தகப்பன் உள்ளத்தைக் காட்டி சந்தோஷப்படுத்துங்கள். நீங்கள் உங்கள் மந்தையை விழிப்பாய் கண்காணித்து இழந்தவைகளை, காணாமற் போனவைகளைத் திரும்பக் கொண்டு வந்து அந்தந்த ஸ்தானத்தில் நிறுத்துங்கள்.

நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை சிந்தித்து மனத் தெளிவோடு ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் செய். மனக்கடினப்பட்டு, போனால் போகட்டும் போடா என்று சொல்லாதீர்கள். மாறாக எல்லோரையும் கிறிஸ்துவுக்கு முன்பாக நிறைவுள்ளவர்களாக நிறுத்தும்படி விழிப்பாய் உங்களுக்கு உண்டானவைகளை பணயம் வைத்தாகிலும் உத்தரவாதம் செய்யுங்கள்.

★★★

## முடிவுரை

என் இனிய போதகர்களே! மேய்ப்பர்களே! நீங்கள் கடந்து வந்த பக்கங்கள் உங்கள் முகத்தை உங்களுக்குக் காட்டியிருக்கும் என்று நம்புகிறேன். உங்கள் ஊழியம் தளர்ச்சி அடைந்ததற்கு என்ன காரணம் என்பதைத் தெளிவாக உணர்த்தியிருக்கும் என்று உணருகிறேன்.

வளரும் ஊழியர்கள் கர்த்தர் வருகைக்கு முன்பாக தங்களுக்கு அளிக்கப்பட்ட தரிசனத்தின்படியே இந்த மகிமையான ஊழியத்தைக் கட்டி மாசற்ற சபையை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்க தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது எனது உளவேட்கை.

என் ஊழியப் பாதையில் கண்ணீர் வடித்த காலங்கள், செந்நீர் வடித்த காலங்கள் இன்றும் என் முன் நிழலாய் நிற்கிறது. எனது சொற்ப கால ஊழியத்தின் பாதையில் எத்தனையோ தேவதாசர்களை சந்தித்திருக்கிறேன். அவர்களில் சிலர் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்கள். சிலர் மகிமையாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஊழியத்தின் பாதையில் வெற்றி கண்டவர்களின் சாட்சி நாம் போகும் பாதைக்கு வழிகாட்டும் பச்சை விளக்குகள், தோல்வி கண்ட ஊழியர்களின் வாழ்க்கை நாம் போகக்கூடாது என்று எச்சரிக்கும் சிவப்பு விளக்குகள் இவைகளை கவனத்தில் கொண்டு நமக்கு நியமித்திருக்கிற

ஓட்டத்தில் நாம் பொறுமையாய் ஓட வேண்டியது மிகவும் அவசியம்.

என் சபையைக் கட்டுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். அதை அவர் செய்வார். நீங்கள் அவர் ஆடுகளை மேய்த்து உங்கள் ஊழியத்தை நிறைவேற்றி தேவனுடைய மனிதனாய் அவரது இருதயத்துக்கு ஏற்றவர்களாய் இருங்கள். கர்த்தர் உங்களைக் கட்டுவார். உங்கள் சபையைக் கட்டுவார்.

**இயேசுவின் காயங்களின் கனிகளே நாம்**

**களிகூர்ந்து மகிழ்ந்து ஆடிப்பாடுவோம்!**

**அப்போஸ்தல ஊழியத்தில் ஆர்ப்பரிப்போம்**

**ஆசீர்வாத மழைக்கு மேகங்களாவோம்!**

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**